
# திருக்கோயில்



அக்டோபர்
1999

விலை
ரூபாய் ஐந்து





வடபழநி அருள்மிகு வடபழநியாண்டவர் ஆலயத்தில் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறையின் சார்பில் மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பவளவிழா நிறைவு மற்றும் 76ஆம் ஆண்டு பிறந்தநாளை முன்னிட்டு ஏழைக்குடும்பத்தைச் சார்ந்த 76 இணைகளுக்கு இலவசத் திருமணவிழா, 16.9.99 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. இத்திருமணவிழாவிற்கு மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப்பண்பாடு மற்றும் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமை தாங்கிச் சிறப்புரையாற்றினார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்துறை அமைச்சர் ஆர்க்காடு நா. வீராசாமி அவர்கள் தம் திருக்கரத்தால் மங்கல நாண் எடுத்துக் கொடுத்துத் திருமணங்களை நடத்தி வைத்தார்கள். மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் எஸ்.பி. சற்குண பாண்டியன் அவர்கள், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் க. சுந்தரம் அவர்கள், இந்துசமய அறநிலைய ஆட்சித் துறையின் சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் திருமிகு சுகவனேஸ்வர், இ.ஆ.ப. அவர்கள் மற்றும் பல முக்கிய பிரமுகர்கள் இந்த இலவசத் திருமண விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



# திருக்கோயில்




திங்கள் இதழ்

| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | ரூ. 5.00 |
| ஆண்டு உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 60.00 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 500.00 |

| மாலை | திருவள்ளுவர் ஆண்டு 2030 | பிரமாதி ஆண்டு புரட்டாசி | மணி |
|---|---|---|---|
| 41 | | அக்டோபர் 1999 | 10 |



## சிறப்பாசிரியர்

திருமிகு சுகவனேஸ்வர், இ.ஆ.ப.

சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர்

## ஆசிரியர்

முனைவர் த. அமிர்தலிங்கம்,

எம்.ஏ., பி.எச்.டி.

## திருக்கோயில் நிர்வாகக் குழுவினர்

திரு எஸ். கனகய்யா, பி.எஸ்.சி., பிஎல்.

கூடுதல் ஆணையாளர்

திரு ப. தனபால், எம்.ஏ., பி.எல்.

இணை ஆணையாளர், தலைமை இடம்

திருமதி மா. கவிதா, பி.எல்.

ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

திரு தி. ஜெயராமன், பி.ஏ., பி.எல்.

இணை ஆணையாளர் - செயல் அலுவலர்

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி

திருக்கோயில், பழநி.


## முகப்பு

பட்டீசுவரம் அருள்மிகு

துர்க்காம்பிகை

## பொருளடக்கம்


*பராசக்தி தவம்புரிந்த பட்டீசுவரம்*

- சுகவனேஸ்வர், இ.ஆ.ப.

சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர்

அவர்கள்

*"கோடை எனும் பதிவந்த இந்திரர் பெருமாளே"*

முனைவர் த. அமிர்தலிங்கம்

*வேலாகி நின்ற வடிவேலவன்*

- அருள்ஞானி கல்பாக்கம் அடிகளார்

*கருடாழ்வார்*

- விஷ்ணுதாசன் எஸ். சுந்தரம்

*கூரத்தாழ்வார்*

- திருமதி கோமதி ராகவன்

*பெரிய புராணம் ஒரு சமூகப் பார்வை*

- டாக்டர் இரா. செல்வ கணபதி

*கம்பரின் இராமாவதாரம்*

- கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

*கம்பன் முன்னுக்குப் பின் முரண்பட்டவன் அல்லன்*

- என். சீனிவாசன்

வே. தியாகராஜன்

*"தமிழ் மாலை"*

- கலைமாமணி அருளரசு மாசிலாமணி

*வினாவும் விடையும் (சைவம்)*

- பருத்தியூர் டாக்டர் கே. சந்தானராமன்



உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :

உயர்திரு ஆணையாளர் அவர்கள்

திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை

119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.

தொலைபேசி : 8279407

# பராசக்தி தவம் புரிந்த பட்டீஸ்வரம்

– சுகவனேஸ்வர், இ.ஆ.ப.
சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் அவர்கள்,
இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.

''சித்தியும் சித்திதரும் தெய்வம்
ஆகித் திகழும் பரா
சத்தியும் சத்தி தழைக்கும்
சிவமும் தவமும் முயல்வார்
முத்தியும் முத்திக்கு வித்தும் வித்
தாகி முளைத் தெழுந்த
புத்தியும் புத்தியின் உள்ளே
புரக்கும் புரத்தை யன்றே''

என்ற அபிராமி அந்தாதிப் பாடல் பராசக்தியும், பரசிவமும் இணைந்து ஞானமும், ஞானத்தின் உட்பொருளுமாகி நின்று மெய்யடியார்களுக்கு அருள் புரியும் தன்மையை உணர்த்துவதைக் காணுகின்றோம்.

அவ்வாறு பராசக்தியும், பரசிவமும் இணைந்து திருவருள் பாலிக்கும் ஒப்பற்ற திருத்தலங்களில் முக்கியமான ஒரு திருத்தலம்தான் காவிரியின் தென் கரையில் மகாமகத்தால் சிறப்புற்று விளங்கும் குடந்தை நகரின் தென் மேற்குத் திசையில் அமைந்து விளங்கும் ''சக்திவனம்'' என வழங்கப்பெறும் பட்டீசுவரம் திருத்தலம் ஆகும்.

சிவபெருமானின் திருவருளைப் பெறுவதற்காக பராசக்தி தவம்புரிந்து அருள் பெற்ற திருத்தலம் ஆகையால் இத்தலம் ''சக்திவனம்'' என வழங்கப்பெற்று வருகின்றது.

பராசக்தியின் தவத்திற்குத் துணைபுரிய வந்த காமதேனுவின் மகளான பட்டி, தானும் மண்ணினால் லிங்கம் அமைத்துத் தன் பாலைப் பொழிந்து வழிபட்டு அருள் பெற்றமையால் இத்தலம் ''பட்டீஸ்வரம்'' எனவும் வழங்கப்பெற்று வருகின்றது.

அன்னை ஞானாம்பிகை உடனுறையும் பட்டீஸ்வரர் தேனுபுரீசுவரர் திருக்கோவிலின் வடக்கு வாயிலின் கண் வீற்றிருக்கும் ஸ்ரீ அஷ்டபுஜாதுர்க்காதேவி நவகோடி அர்ச்சனையைப் பெற்று நவகோடி நாயகியாகத் திகழும் சிறப்பினை யாவரும் அறிவர்.



குடந்தை அருள்மிகு பட்டீசுவரர் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவில் நம் அறநிலையத் துறையின் சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் திருமிகு சுகவனேஸ்வர் இ.ஆ.ப. அவர்கள் ''ஸ்ரீ துர்கா பிரபாவம்'' எனும் நூலை வெளியிடுகிறார்கள்.

சோழர்களின் குலதெய்வமான ஸ்ரீதுர்க்கை பண்டு தொட்டு இன்று வரை இங்கு ஆறடி உயரம் கொண்டு புன்னகை சிந்தும் வதனத்துடன் கம்பீரமாகக் காட்சி தந்து திருவருள் பாலித்து வருகின்றாள்.

சோழ அரசியர்களில் சிறப்புற்று விளங்கிய மங்கையர்க்கரசியாரும், செம்பியன் மாதேவியாரும், குந்தவைப் பிராட்டியாரும் பட்டீஸ்வரத் துர்க்கை மீது அபார பக்தி செலுத்தித் திருப்பணிகள் பல புரிந்தமையை நமக்குக் கல்வெட்டுகள் எடுத்து விளக்குகின்றன.

பட்டீஸ்வரம் ஸ்ரீ துர்க்காம்பிகை தம்மை வழிபடும் அன்பர்களுக்கு அழைத்ததும் அருள்புரிய காலை முன் எடுத்து வைத்துப் புறப்படுகிற தோற்றத்துடன், சாந்த சொரூபிணியாகக் காட்சி தருகின்றாள்.

மதுரை மீனாட்சியின் தோளில் கிளி வீற்றிருப்பதுபோல், பட்டீஸ்வர துர்க்கையின் எட்டாவது திருக்கரத்தில் கிளி இருப்பது விசேடமாகும்.

மகிடாசுரன் தலைமேல் தன் பாதங்களை வைத்து, சிம்ம வாகனத்தில் எட்டுக்கரங்களுடன் மகரக் குண்டலங்களுடன் திரிபங்க ரூபியாய் மூன்று நேத்திரங்களுடன் கம்பீரமாகக் காட்சிதரும் பட்டீஸ்வரம் ஸ்ரீ துர்க்காம்பிகையை இத்''திருக்கோயில்'' இதழின் முகப்புப்படமாக வெளியிட்டிருப்பதைப் பக்தர்கள் தரிசித்து மகிழலாம்.

அருள் அற்புத மகிமைகள் நிகழ்த்தி வரும் பட்டீஸ்வரம் ஸ்ரீதுர்க்காம்பிகைக்கு வரலாறு காணாத நிகழ்ச்சியாக 1987 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 2ஆம் தேதி நவகோடி அர்ச்சனை தொடங்கப்பட்டு, 1996-ஆம் ஆண்டு வரை அர்ச்சனை, ஒன்பது ஆண்டுகளில் ஒன்பது கோடி அருச்சனையாக நவகோடி நாயகிக்கு வெகு விமரிசையாக நிறைவேற்றி முடிக்கப்பட்ட வைபவம், அன்னையின் அருளற்புதத்தால் நடைபெற்ற ஒப்பற்ற வைபவம் ஆகும்.

''பயிரவி பஞ்சமி பாசாங்குசை
பஞ்ச பாணி வஞ்சர்
உயிரவி உண்ணும் உயர்சண்டி
காளி ஒளிரும் கலா
வயிரவி மண்டலி மாலினி
சூலி வாராகி என்றே
செயிரவி நான்மறை சேர்திரு
நாமங்கள் செப்புவரே''

என அபிராமிபட்டர் கூறுவதைப் போல, அன்னையின் ஆயிரமாயிரம் திருநாமங்களைச் சொல்லி வழிபடும் அடியார்களுக்கு அன்னையின் திருவருளால் எக்காரியம் தான் வெற்றி பெறாமல் போகும்?

பராசக்தியின் திருவருளால் பார்போற்ற ஸ்ரீ ஞானாம்பிகை உடனுறை ஸ்ரீ தேனுபுரீசுவரசுவாமி திருக்கோயிலுக்கும், ஸ்ரீ துர்க்காம்பிகை திருக்கோயிலுக்கும் சுமார் 3 கோடி ரூபாய் செலவில் திருப்பணிகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டு 1.7.99 அன்று மகா கும்பாபிஷேகம் யாவரையும் பிரமிக்க வைத்த ஒரு அற்புதமான நிகழ்ச்சியாக நடைபெற்றதையும் இங்குக் குறிப்பிட்டாதல் வேண்டும்.

சுவாமி, அம்பாள், துர்க்கையம்மன் ஆகிய மூன்று தெய்வங்களுக்கும் உத்தம பட்சமாக 33 ஹோம குண்டங்கள் நிர்மாணம் செய்து, 250 சிவாச்சாரியர்களை வரவழைத்து, யாகசாலை நடத்திக் கும்பாபிஷேகம் செய்த சிறப்பினைக் கண்டுகளித்து பாராட்டிய மெய்யன்பர்கள் பலராவர்.

திருக்கோயிலின் மேற்குக் கோபுரம் இடிந்து கீழே விழுந்து போனதை மீண்டும் நிலை நிறுத்தி, 45 அடி உயரமும், 5 அடி அகலமும் உள்ள பிரம்மாண்டமான உள் மற்றும் வெளி மதில் சுவர்களை முழுமையாகச் செப்பனிட்டுத் திருப்பணி செய்ததை அற்புத சாதனை என்று வியந்து பாராட்டிய மெய்யன்பர்கள் பலராவர்.

நவகோடி நாயகியான ஸ்ரீ அஷ்டாபுஜ துர்க்கைக்குப் பெரிய அளவில், விசாலமான பிரதட்சன மண்டபத்தைச், சிறந்த சிற்ப வேலைப்பாடுகளுடன் 60 லட்சம் ரூபாய் செலவில் உருவாக்கியிருப்பதும் இத்திருப்பணியின் முக்கிய அம்சம் ஆகும்.


45 அடி உயரத்தில் தேக்குமரத்தில் புதிதாக துவஜஸ்தம்பம் அமைத்து, திருக்கோயில் முழுவதும் மராமத்து வேலைகள் செய்து, மடப்பள்ளியைத் திருத்தம் செய்து, திருக்குளம் செப்பனிட்டு, திருக்கோயில் முழுமைக்கும் மின்சார வசதி செய்து, தரைத்தளங் கள் முழுவதும் கருங்கற்களால் புதிதாக அமைத்து என நிறைவேற்றப்பட்ட திருப்பணிகள் ஏராளம் ஆகும்.

ஸ்ரீ ஆக்ஞா கணபதி சந்நிதி, ஸ்ரீ பைரவர் சந்நிதி, ஸ்ரீசண்முகர் சந்நிதி, ஸ்ரீ தட்சிணாமூர்த்தி சந்நிதி, நவகிரக மேடை ஆகிய யாவும் பொலிவுறத் திருப்பணி செய்யப்பட்டு, ஸ்ரீ பட்டீஸ்வரர், ஸ்ரீ ஞானாம்பிகை சந்நிதிகளும் பேரெழில் பெறத் திருத்தம் செய்யப்பெற்றுள்ளன.

ஸ்ரீ துர்க்கையம்மன் சந்நிதியில் பக்தர்கள் எலுமிச்சை விளக்குகள் ஏற்றி வழிபடும் வகையில் புதியதோர் திருவிளக்கு மண்டபம் உருவாக்கம் பெற்றது மட்டுமல்ல, திருக்கோயில் நிர்வாகத்திற்காகப் புதியதோர் அலுவலகக் கட்டடமும் அமைக்கப்பெற்றுள்ளது.

மன்னர்காலத் திருப்பணிக்கு ஒப்பாக வேலைப்பாடுடன் கூடிய 108 நந்தி உருவங்களையும் திருக்கோயிலைச் சுற்றி மதில் சுவரின்மேல் அமைத்திருப்பதைப் பாராட்டாதவர்களே கிடையாது.

பலகோடி ரூபாய் செலவில் இவ்வாறு திருப்பணிகள் யாவும் முழுமையாக நிறைவேற்றப்பட்டிருப்



திருப்பணிக்கு முன் திருக்கோயில் திருமதில்கள்

பினும், இதில் நம் அறநிலையத் துறைக்கும், அரசிற்கும் எவ்வித பணச் செலவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. முழுவதும் பக்தர்களின் நன்கொடைகளின் வாயிலாகவே இப்பிரம்மாண்டத் திருப்பணி நிறைவேற்றப்பட்டிருப்பது உண்மையில் வியக்கத்தக்க மாபெரும் சாதனை என்பதில் ஐயமில்லை.

''திருக்கோயில் பொருந்த ஓர் செங்கல் இடுவார் உலகாள்வார்'' என்பது பழமொழி.


திருக்கோயில் திருப்பணியின் அவசியத்தை எடுத்துக் காட்டும் வகையில் கி.பி. 15ஆம் நூற்றாண்டில் தமிழகத்தை ஆண்டிருந்த பராக்கிரம பாண்டியன் தென்காசி விசுவநாதர் ஆலயத்தைக் கட்டிவைத்து அதில் பொறித்துள்ள கல்வெட்டுப் பாடல்கள் வரலாறு போற்றும் அற்புதப் பாடல்களாக இன்றும் விளங்கிவரக் காணுகின்றோம்.

''மனத்தால் வகுக்கவும் எட்டாத கோயில்
வகுக்க முன்நின்று
எனைத்தான் பணிகொண்ட நாதன் தென்காசியை
என்றும்மண்மேல்
நினைத்தாதரஞ் செய்து தங்காவல் பூண்ட
நிருபர் பதந்
தனைத்தாழ்ந் திறைஞ்சித் தலைமீதில்
யானும் தரித்தனனே''

''ஆராயினும் இந்தத் தென்காசி மேவும்
பொன் ஆலயத்து
வாராததோர் குற்றம் வந்தால் அப்போது
அங்குவந்து அதனை
நேராகவே ஒழித்துப் புரப்பார்களை
நீதியுடன்
பாரார் அறியப் பணிந்தேன்
பராக்கிரம பாண்டியனே''

''அரிகேசரிமன் பராக்கிரம மாறன்
அரன் அருளால்
பரிசேர் பொழில்அணி தென்காசிக்
கோயில் வகுத்துவலம்
புரி சேர் கடற்புவி போற்றவைத்தேன்
அன்பு பூண்டிதனைத்
திரிசேர் விளக்கெனக் காப்பார் பொற்பாதம்
என் சென்னியதே''

''சாத்திரம் பார்த்திங்குயான் கண்ட
பூசைகள் தாம் நடாத்தி
ஏத்தி அன்பால் விசுவநாதன் பொற்கோயில்
என்றும் புரக்கப்
பார்த்திபன் கொற்கைப் பராக்கிரம மாறன்
பரிவுடன் நம்
கோத்திரந் தன்னிலுள் ளார்க்கும்
அடைக்கலம் கூறினனே''



திருப்பணிக்குப் பின் திருக்கோயில் திருமதில்கள்

திருக்கோயில் திருப்பணி மகத்துவத்தைப் பராக்கிரம பாண்டியன் போன்ற நம் முன்னோர்கள் இவ்வாறு பக்தி சிரத்தையுடன் செய்துகாட்டியுள்ள நெறியின்படியே அருள்மிகு பட்டீசுவரம் திருக்கோயில் திருப்பணியும் நிகழ்த்தி முடிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

காயத்திரிதேவியின் திருவருளால் விசுவாமித்திரர் பிரம்மரிஷி பட்டம் பெற்றதும், மார்க்கண்டேயர் வழிபட்டு என்றும் பதினாறாகச் சிரஞ்சீவித் தன்மை பெற்றதும், இராமர் இராமலிங்கத்தை இராமேசுவரம் போலவே பிரதிட்டை செய்து கோடி தீர்த்தம் உண்டாக்கி வழிபட்டுத் திருவருள் பெற்றதுமான அற்புதமான திருத்தலமான அருள்மிகு பட்டீசுவரம், பாலறாவாயரான திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற திருத்தலம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

திருஞானசம்பந்தர் இத்திருத்தலத்திற்கு வந்தபோது, ஞானக்குழந்தையான பாலறாவாயர் வெயிலால் வாடாதிருக்கும் பொருட்டு அன்னை ஞானாம்பிகையும், ஈசன் பட்டீசுவரரும் முத்துப் பந்தர் வழங்கி அற்புதம் செய்த திருத்தலமும் இது என்பது குறிப்பிடத்தக்கது.

சேக்கிழார் பெருமான் தாம் பாடியுள்ள பெரிய புராணத்தில் திருஞானசம்பந்தருக்கு முத்துப் பந்தர் வழங்கிய அற்புதத்தை வியந்து போற்றியுள்ள பாடல்கள் பின்வருமாறு:


''வெம்மைதரு வேனிலிடை
வெயில்வெப்பம் தணிப்பதற்கு
மும்மைநிலைத் தமிழ்விரகர்
முடிமீதே சிவபூதம்
தம்மை அறியாதபடி தண்தரளப்
பந்தர் எடுத்து
எம்மைவிடுத்து அருள்புரிந்தார்
பட்டீசர் என்று இயம்ப''

(பெ.பு. 2295)

''அவ்வுரையும் மணிமுத்தின் பந்தரும்
ஆகாயம் எழச்
செவ்விய மெய்ஞ்ஞானம் உணர்
சிரபுரத்துப் பிள்ளையார்
இவ்வினைதான் ஈசர் திருவருள் ஆகில்
இசைவது என
மெய்விரவு புளகமுடன் மேதினியின்
மிசைத் தாழ்ந்தார்

(பெ.பு. 2296)

திருஞானசம்பந்தர் தம் திருக்கோயிலுக்கு வரும் காட்சியைக் காணும் பொருட்டு நந்தியைச் ''சற்றே விலகியிரும் பிள்ளாய்'' என விலகியிருக்குமாறு சொன்னதால் இத்தலத்தில் பட்டீசுவரர் சந்நிதியில் நந்தி விலகியிருக்கும் அற்புதத்தை இன்றும் நாம் தரிசித்து இன்புறலாம்.





திருஞானசம்பந்தருக்குப் பட்டீசர் முத்துப்பந்தல் வழங்கிய காட்சி

திருப்புன்கூர் திருத்தலத்தில் திருநாளைப் போவார் தம்மைத் தரிசித்து இன்புற நந்தியை விலகியிருக்கக் கூறிய இறைவர், தம்பொருட்டு, தாம் திருஞான சம்பந்தரை வரவேற்று இன்புறும் பொருட்டு நந்தியை விலகியிருக்கக் கூறிய அருள் அற்புதத்தை என்னென்று போற்றுவது?

இவ்வாறு நந்தியை விலகியிருக்கச் செய்து திருஞானசம்பந்தருக்குத் திருவருள் புரிந்த பட்டீசுவரப் பெருமானுக்கு இடிபாடுற்ற திருமதில் சுவர்களையும், திருக்கோபுரத்தையும் சிறப்புற அமைத்து 108 நந்தி உருவங்களையும் அமைத்துத் திருப்பணியை நிறைவேற்றியுள்ள திருப்பணிக் குழுவினருக்கு என் மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

யாகசாலை வேள்வியின் போதே ''ஸ்ரீதுர்கா பிரபாவம்'' எனும் நூலை வெளியிட்டும், மகா கும்பாபிஷேக மண்டலாபிஷேகத்தை ஒட்டி மகா கும்பாபிஷேக மலர் வெளியிட்டும் அரும்பணிகள் புரிந்துள்ள திருப்பணிக் குழுவினரையும், திருக்கோயில் நிர்வாகிகளையும் நான் மனமாரப் பாராட்டி மகிழ்கின்றேன்.

பட்டீசுவரம் ஸ்ரீ துர்க்காம்பிகையின் திருவருள் பொங்கிப் பரிமளிக்கும் இப்பொன்னான வேளையில் புவி கொண்டாடவரும் நவராத்திரி வைபவத்தை ஒட்டி மெய்யன்பர்கள் அனைவரும் நவகோடி நாயகியை வழிபட்டு இகபரசுகங்கள் யாவும் பெற்று இன்புற எல்லாம் வல்ல ஞானாம்பிகை உடனுறை அருள் மிகு பட்டீசுவரப் பெருமான் திருவருளைப் பணிந்து போற்றி வணங்குகின்றேன்.

நாயகி நான்முகி நாரா
யணிகை நளின பஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி
சாமளை சாதி நச்சு
வாயகி மாலினி வாராகி
சூலினி மாதங்கி என்று
ஆயகியாதி உடையாள்
சரணம் அரண் நமக்கே

- அபிராமி அந்தாதி

காரின்மலர் கொன்றை விரிதார் கடவுள்
காதல்செய்து மேயநகர்தான்
பாரின் மலிசீர் பழைசை
பட்டிசரம் ஏத்தவினை
பற்றழியுமே''

- திருஞானசம்பந்தர்

★★★

# கோடை எனும் பதிவந்த இந்திரர் பெருமாளே!

- முனைவர் த. அமிர்தலிங்கம்

''கோடைநகர்'' என்று அருணகிரிநாதப் பெருமானால் அழைக்கப்பெற்றதும், எட்டுத் திருப்புகழ்ப் பாடல்களைப் பெற்றதுமான வல்லக்கோட்டை முருகனின் திருத்தலம், இராமாநுசப் பெருமானின் அவதாரத் திருத்தலமான ஸ்ரீ பெரும்புதூரிலிருந்து 10 கி.மீட்டர் தொலைவில் உள்ளது.

வள்ளி தெய்வயானையர் சூழ முருகப் பெருமான் ஏழடி உயரப் பெருமிதமான தோற்றத்துடன் இங்கெழுந்தருளியிருப்பது கண்கொள்ளாக்காட்சியாகும். தமிழ் நாட்டில் இவ்வளவு உயர்ந்த திருமேனியுடைய முருகப் பெருமான் வேறு எங்குமில்லை என்று கூறுகிறார்கள்.

பெருமிதத் தோற்றமுடைய வல்லக்கோட்டை முருகப்பெருமானைத் தொழும் மெய்யடியார்களுக்குப்

''பொன்னும் வரும் பொருளும் வரும்
பொன்னான மனத்தில் நிறைவு வரும்
எண்ணும் வரும் எழுத்தும் வரும்
எந்நாளும் மகிழ்வு தானே வரும்
ஆயுள் வரும் ஆறுதல் வரும்
கோயில் செல்லும் பக்திவரும்
பாயும் இளமை தானும் வரும்
சாயும் மனமும் தானே வரும்
நலமே வரும் வளமே வரும்
நலமே நாடும் நல்லுளம் வரும்
குலத்தைக் காக்கும் குலமகள் வருவாள்
வல்லக் கோட்டையான் பதம் பணிந்தால்''

என்று தலமகிமை கூறப்படுவது குறிப்பிடத்தக்கது.

தேவகுருவாகிய வியாழபகவான் இந்திரனிடம் ''பூவுலகில் முருகனை வழிபட்டு உய்வதற்கு உகந்த திருத்தலம் வல்லக்கோட்டையே'' என அறிவுறுத்திய திருத்தலம் இதுவாகும்.

இந்திரன் இத்திருத்தலத்திற்கு வந்து தன் வச்சிராயுதத்தால் ''வச்சிர தீர்த்தம்'' எனும் திருக்குளத்தைத் தோற்றுவித்தான். கோடையிலும் வற்றாமல் தீஞ்சுவைத் தண்ணீரைக் கொண்டு தீர்த்தமாடுவார்க்கு அருபெரும் மருந்தாய் - அமுதாய் வச்சிரதீர்த்தம் விளங்கும் சிறப்பினைத் தலபுராணம் பின்வருமாறு விளங்க எடுத்துரைக்கின்றது.

''அச்சுதன் மருகன் அமர்ந்திடும் கோடை
அணிநகர் அதனிலே இந்த
வச்சிர தீர்த்தம் அதனிலோர் போது
வரமருள் சரவணன் தாளாம்
செச்சைமா மலரை நினைந்துநேர் மூழ்கின்
திருந்துளம் நினைந்தவை பெற்று
வச்சிரப் படையோன் வாழ்தரு முலகில்
வாழ்வரே வாஞ்சையோ டென்றும்''

''அவ்வியங் கமலப் போது
மலர்வச்ர தீர்த்தம் தன்னுள்
எல்லையில் புகழ்கொண் டோங்கும்
என்நிறைய குகன்தான் உன்னி
வெல்லும் ஆ றெழுத்தைச் செப்பி
விருப்பமாய் மூழ்கு வாரேல்
வல்லியாம் இருவர் சேரும்
வரதன்பொற் றாளில் சார்வார்''


என வரும் தீர்த்தவிசேடப் பாடல்களால் வச்சிர தீர்த்தத்தின் பெருமையை நாம் நன்கு உணரலாம்.

முன்னொரு காலத்தில் கோரன் எனும் அசுரனால் நாடிழந்த சலம்கொண்ட புரத்தரசன் பகீரதன் என்பவன் துருவாச முனிவரின் அறிவுரைக்கு இணங்க வல்லக் கோட்டை வந்து வச்சிரதீர்த்தத்தில் நீராடி சுக்கிரவார விரதம் இருந்து தம் இழந்த நாட்டை மீளப்பெற்றான் என்று தலபுராணம் கூறுகின்றது.

பகீரத மன்னன் அமைத்து மிகப் பிரசித்தியாக விருந்த வல்லக்கோட்டை ஆலயம் காலப்போக்கில் பழுதுபட்டுப் புகழ் மங்கியிருந்த வேளையில்தான் திருப்போரூர் வழிபட்டு திருத்தணிகை செல்ல விழைந்த அருணகிரிநாதரின் கனவில் ஒருநாள் கந்தவேள் தோன்றி ''வல்லக்கோட்டைக்கு வர மறந்தனையோ'', என்று அறிவுறுத்தி அவரிடம் கருத்துச் செறிவுமிக்க எட்டுத் திருப்புகழ்ப் பாடல்களைப் பாடப் பெற்றுக் கொண்டுள்ள சுவையான வரலாறும் நிகழ்ந்துள்ளது.

''கோடை நகர் வாழ வந்த பெருமாளே!'' எனவும்
''தேவா சாவா மூவா நாதா தீரா கோடைப் பதியோனே''
எனவும்
''கோடையம்பதி யுற்று நிற்கும் மயில்வீரா'' எனவும்
''கோடையெனும் பதி வந்த இந்திரர் பெருமாளே''
எனவும்
''கோடை தேவப் பெருமாளே'' எனவும்

இந்திரன் முதலான தேவர்கள் பலரும் வழிபட அருளிய வல்லக்கோட்டை முருகன் பெருமையை அருணகிரி



கோடையிலும் வற்றாத வச்சிர தீர்த்தம்

நாதப் பெருமான் நாவாரப் பாடி நெஞ்சாரப் புகழ்ந் திருப்பதை இத்திருத்தலத் திருப்புகழ்ப் பாடல்களில் கண்டு இன்புறுகின்றோம். அருணகிரிநாதப் பெருமானுக்கு உகந்த திருவண்ணாமலை, திருத்தணிகை, திருச்செங்கோடு, பழநி, திருவிடைக்கழி முதலான திருத்தலங்களுடன் ஒப்பிடத்தக்க உயர்வினைப் பெற்றது வல்லக்கோட்டை திருத்தலம் என்பதால்

''அருணை திருத்தணி நாக மலை பழநிப் பதிகோடை
அதிப இடைக்கழி மேவு பெருமாளே''

என இத்திருத்தலங்கள் யாவற்றையும் ஒருங்குவைத்து அருணகிரிநாதப் பெருமான் பாடிச் சிறப்பித்திருப்பதைக் காணுகின்றோம்.

வல்லக்கோட்டை திருத்தலம், அருணகிரிநாதர் தரிசித்த காலத்தில் பாழ்பட்டிருந்த நிலையைத் தம் திருப்புகழ்ப்பாடலில், அவர் குறிப்பால் உணர்த்தியிருத் தலைக் காணுகின்றோம்.

குண்டர்கள் என்பவர்கள் யாவர் என்பதை வல்லக்கோட்டை திருத்தலத் திருப்புகழில் விளக்கியுள்ள அருணகிரி நாதசுவாமிகள் நீதி அறங்களைச் சிதைப்ப வரும், தேவாலய உடைமைகளை அபகரிப்போரும் அவ்வாறே மித்திரதுரோகம், குருதுரோகம் புரிவோரும், பண்டிகை விரதங்களைப் பின்பற்றாதவர்களும், பெரி யோரையும், கொடையாளர்களையும் ஏசுவோரும் ஆகிய குண்டர்கள், நமனார் வருத்த நரகினை அடைவார்கள் என்று பாடியுள்ள கோடைநகர்த் திருப் புகழ் பொருள் பொதிந்த திருப்புகழாக விளங்குகின்றது: அத்திருப்புகழ்ப் பாடற்பகுதி பின்வருமாறு:

''தோழமை கொண்டு சலஞ்செய் குண்டர்கள்
ஓதிய நன்றி மறந்த குண்டர்கள்
சூழ் விரதங்கள் கடிந்த குண்டர்கள் பெரியோரைத்
தூஷண நிந்தைபகர்ந்த குண்டர்கள்
ஈவதுகண்டு தகைந்த குண்டர்கள்
சூளுறவென்பது ஒழிந்த குண்டர்கள் தொலையாமல்
வாழநினைந்து வருந்து குண்டர்கள்
நீதியறங்கள் சிதைந்த குண்டர்கள்
மான அகந்தை மிகுந்த குண்டர்கள் வலையாலே
மாயையில் நின்று வருந்து குண்டர்கள்
தேவர்கள் சொங்கள் கவர்ந்த குண்டர்கள்
வாதை நமன்தன் வருந்திடும் குழி விழுவாரே''

டாக்டர் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் வல்லக்கோட்டைத் திருப்புகழ் விளக்க விரிவுரையைக் கற்பவர்க்கு அமுதமாக வழங்கியிருப்பதும்,

''தேனாகத் தித்திக்கும் இத்தெய்வத்
திருப்புகழ்ப்பாடல்களைப்
பாராயணம் செய்வோர் ஆரா அமுதம் பெறுவர்,
இத்திருப்
புகழ்ப்பாடல்கள் ஏழு உலகங்களையும் உய்விக்கும்,
ஏழு
பிறப்பையும் மாற்றும்'' எனப் போற்றியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த பத்து, பதினைந்து ஆண்டுகளில் வல்லக் கோட்டை ஆலயம் நம் அறநிலையத்துறையின் சீரிய பணிகளால் சிறப்புற்று வரும் வளர்ச்சி பாராட்டத்தக்கது. வயலூர் திருக்கோயில் வாரியார் சுவாமிகளால் பெருமை பெற்றதைப் போல, வல்லக்கோட்டை திருக்கோயில் தற்பொழுது வல்லக்கோட்டை முருகன் அடிமை திருப் பணிச் செல்வர் திருமிகு அரங்கநாதன் அவர்களாலும் சிறப்புற்று வருவது குறிப்பிடத்தக்கது.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையான வல்லக்கோட்டை திருத்தலத்தை 1983-ஆம் ஆண்டு மார்ச்



ஆடிக்கிருத்திகையில் பால்காவடி ஏந்திவரும் பக்தர்கள்

திங்கள் 20-ஆம் நாள் தரிசிக்கும் நல்வினைப் பயனைப் பெற்ற அவர் அன்றே வல்லக்கோட்டை முருகனுக்கு மெய்யடிமையாகி, வல்லக்கோட்டை முருகன் திருப் பணிக்கே தம்மை அர்ப்பணித்துக் கொண்டுள்ளார் எனில், ஒருகாலத்தில் நாத்திகராக இருந்த இவரை ஆட்கொண்ட கலியுக தெய்வம் கந்தவேளின் கருணையை என்னென்று புகழ்வது?

முதன்முதலாக இவர் முருகனைத் தரிசித்த நாளில் ஆலயத்தில் விளக்கெரிக்கவும், ஆலய அர்ச்சகருக்கு மாத ஊதியம் வழங்கவும் வருமானம் இல்லாத நிலையிருந்தது.

''முருகா! என்னிடம் செல்வம் இல்லை. நீ கொடுத்த செல்வாக்கு இருக்கின்றது. எனக்காக அதை நான் இன்றுவரை பயன்படுத்தவில்லை. இன்று முதல் உனக்கே எல்லாம் அர்ப்பணிக்கின்றேன். பெரிய கோயிலாக இதைப் புனரமைக்க, குறிப்பாக உன் ஆலயத்தில் அணையாமல் விளக்கெரிக்க என் முயற்சிகளுக்குப் பலம் கொடு''

என்று மனதார வேண்டிக்கொண்ட முருகன் அடிமையான வல்லக்கோட்டை அரங்கநாதன் அவர்கள், இலங்கைத் தூதர் அலுவலகத்தில் மக்கள் தொடர்பு அதிகாரியாகப் பணியாற்றி வந்த நாட்களிலும், ஓய்வு பெற்றவிட்ட இன்றும் கூட, தாம் எடுத்துக்கொண்ட விரதம் மாறாமல், ஒவ்வொரு நாளும் ஓராயிரம் முறையாகிலும் வல்லக்கோட்டை முருகனின் பெருமையை ஒவ்வொருவரிடமும் ஓய்வில்லாமல் பறைசாற்றி முருகன் அருளே அரும்பெரும் துணையாக - அகந்தைக்குச் சற்றும் இடம் கொடுக்காமல் ஆற்றிவரும் அருந்தொண்டு யாவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாத ஒன்று ஆகும்.

வல்லக்கோட்டை முருகன் ஆலயம் கடந்த 16 ஆண்டுக்காலங்களில், புதியதாக நிர்மாணிக்கப்பெற்ற விஜயகணபதி சந்நிதி, தேவிகருமாரி திரிபுரசுந்தரியம்மன் சந்நிதி, சண்முகநாதர் சந்நிதிகளுடன், பல்லாயிரக்கணக் கான பக்தர்கள் வசதியாக வணங்கி வழிபடுவதற்கு அமைக்கப் பட்டுள்ள அழகிய முன் மண்டபத்துடன். புதிதாக அமைக்கப் பெற்றுள்ள திருமதில் சுவர்களுடன் நாளும் நாளும் பெற்று வந்துள்ள வளர்ச்சி எல்லாம் காணக் கண்கோடி வேண்டுவன ஆகும்.

வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளிலும், மாதந்தோறும் பரணி, கார்த்திகை நாட்களிலும், ஆங்கிலப் புத்தாண்டு, தமிழ்ப்புத்தாண்டு, நவராத்திரி, கந்தர் சஷ்டிகளிலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வல்லக் கோட்டைக்கு வருகிறார்கள். வள்ளி மணாளனைத் தரிசிக் கிறார்கள். எண்ணிய எண்ணியாங்கு எல்லாம் வல்ல முருகப்பெருமானின் திருவருளைப் பெற்றுத் திளைக் கிறார்கள்.

இவ்வளவு திருப்பணிகள் நடைபெற்றுத் திருக் கோயிலும் மகத்தான வளர்ச்சியைப் பெற்றிருந்த போதிலும் சென்னையிலிருந்தும், மற்ற மற்ற முக்கிய நகரங் களிலிருந்தும் வல்லக்கோட்டைக்கு நேரடி அரசுப் போக்குவரத்துப் பேருந்துகள் இல்லாத காரணத்தால்

மிகப்பெரிய முன்னேற்றம் திருக்கோயிலுக்கு ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இப்பொழுது வல்லக்கோட்டையை வழிபட விரும்பும் அன்பர்கள், சென்னையிலிருந்து தாம்பரம் அல்லது ஸ்ரீபெரும்புதூர் சென்று அங்கிருந்து வல்லக்கோட்டைக்குப் பேருந்தில் சென்று வழிபடும் வசதி மட்டுமே இருந்து வருகின்றது. முருகனருளால் விரைவில் தேவையான அளவு பேருந்துகள் வல்லக்கோட்டைக்குச் சென்னையிலிருந்து நேரே சென்று வரத் தொடங்குமானால் திருக்கோயில் இமாலய வளர்ச்சியைப் பெற்றுவிடும் என்பது திண்ணம்.

வல்லக்கோட்டைக்கு வள்ளிமணாளனை வழிபட வரும் மெய்யன்பர்களுக்கு வல்லக்கோட்டை தெய்வீக சத்திய தரும ஸ்தாபனம் ஆற்றிவரும் அன்னதான அறப்பணி இங்குக் குறிப்பிடவேண்டிய ஒரு தெய்வீகப் பணியாகும். சிற்றுண்டிச் சாலைகள், கடைகள் என ஒன்றும் இல்லாத இவ்வூருக்கு வழிபட வரும் மெய்யன்பர்கள் பசிவருத்தம் கண்டு வருந்தக்கூடாது என்ற உயரிய அறநோக்கில் தெய்வீக சத்திய தரும ஸ்தாபனம் இங்கு வழிபட வரும் மெய்யன்பர்கள் அனைவரும் வயிறார உண்டு மனமார வாழ்த்தும் வகையில் அன்னதான அறப்பணியை நடத்தி வருகின்றது.

''மண்ணில் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்''

என்று அன்னதானப் பணியைச் சிறப்பித்தார் தெய்வச் சேக்கிழார் பெருமான்.

''அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்'' என்பது திருஞானசம்பந்தர் திருவாக்கு.

''மகேசுவரப் பூசையின் பயன் கயிலாச வாசம்'' என்றும் ஆன்றோர்கள் சிறப்பிப்பர்.

வல்லக்கோட்டையில் வாரம்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளிலும், மாதந்தோறும் கிருத்திகையிலும் காலையிலிருந்து மாலைவரை இடைவிடாமல் ஆயிரக் கணக்கான மெய்யன்பர்களுக்குப் பந்தியில் அமர வைத்து வாழையிலையில் உரிய காய்கறி பதார்த்தங்களுடன் அன்னதானம் இலவசமாக பக்திசிரத்தையோடு செய்யப்படுவது இன்றும் கந்தன் அருளால் நடைபெறும் அருளற்புதம் என்றே கூறுதல் வேண்டும்.

இதனை ஒரு தவமாக நிறைவேற்றி வருபவர் நம் வல்லக்கோட்டை முருகன் அடிமை அரங்கநாதன் அவர்கள். அவருக்குப் பேருதவியாகத் திகழ்ந்து இவ்வன்னதானப் பணியில் உறுதுணை புரிவோர் வல்லக்கோட்டை திரு இராஜாராம் அவர்களும், அவர்தம் துணைவியாரும் ஆவர்.

ஒரு கிருத்திகை நன்னாள், ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு அன்னதானம் குறைவில்லாமல் நடைபெற்று வரும் அதே நேரம் ''வாழை இலை போதாது போல் இருக்கின்றதே'' என்கிறார் அன்னதாதா இராஜாராம் அவர்கள். ''எல்லாம் முருகன் அருள்'' என்று முருகன் மேல் பாரத்தைப் போடுகிறார் முருகனடிமை அரங்கநாதன் அவர்கள். அப்போது வாசலில் மாட்டு வண்டி ஒன்று வந்து நிற்கிறது.

வண்டி ஓட்டிவந்தவர் இறங்கிவந்து பணிவுடன் கூறுகிறார். ''ஐயா! சென்ற கிருத்திகையில் வந்து முருகனை வழிபட்டு, இங்குதான் அமுதருந்திச் சென்றேன். அடுத்த கிருத்திகைக்கு என்னால் ஆன கைங்கரியம் நான் இவ்வன்னதானப் பணிக்குச் செய்ய வேண்டும் என்று எண்ணியே சென்றேன். இரண்டு அரிசி மூட்டைகளும், வாழையிலைகள் ஐநூறும் கொண்டு வந்து இருக்கின்றேன். ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்று வந்தவர் சொன்னபோது வல்லக்கோட்டை முருகன் திருவருளை எண்ணி எண்ணி வியப்புற்றுள்ளார்கள் இவர்கள்.

சாதாரண நாட்களில் பெரிய பாத்திரங்களைத் தூக்க முடியாத இங்குள்ள சமையல்காரர், கிருத்திகை, ஞாயிறு முதலான அன்னதானம் செய்யப்படும் நாட்களில் சாதம் சமைக்கும் பெரிய பாத்திரங்களைத் தானே அனாவசியமாக எடுத்துப் பிறர் துணை சிறிதும் இல்லாமல் கஞ்சியை வடித்துக் கொட்டத் தனக்கு எப்படி சக்தி வருகிறதோ தெரியவில்லை! ''எல்லாம் வல்லக் கோட்டையான் திருவருள்'' என்று வியப்புடன் கூறுகிறார். அன்னதான அறப்பணியில் தம்மையும் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே இளைஞர்கள் பலர் இங்கு வாரந்தோறும் வந்து நிறைந்து விடுகிறார்கள். இவர்கள் ஒவ்வொருவரும் சொல்லும் முருகன் திருவருள் பெருமையைக் கேட்கும் போது நம் உள்ளம் நெகிழ்ந்து, பக்திப் பரவசத்தில் கண்ணீர் பெருகுவது உண்மை, முற்றிலும் உண்மை.

வல்லக்கோட்டையில் இதுபோல் அற்புதம் ஒன்றல்ல, ஓராயிரம் நிகழ்ந்த வண்ணம் உள்ளது.

கலியுக வள்ளல் கந்தனை வல்லக்கோட்டையில் சென்று தரிசிப்போம் வாருங்கள்! முருகன் அருளால் கைகூடிவரும் கைமேல் பலன்கள், பெற்றுய்வோம் வாருங்கள்.

நாடிய வானோர்க் கென்றும்
நண்ணுதல் அரியாய் போற்றி!
பாடிய பத்தர்க் கென்றும்
பரிந்தருள் மூர்த்தி போற்றி!
நீடிய செல்வம் கல்வி
நித்யமங் களங்கள் யாவும்
கூடிய வல்லக் கோட்டைக்
குமரனே போற்றி போற்றி!

★★★

# வேலாகி நின்ற வடிவேலவன்

– அருள்ஞானி கல்பாக்கம் அடிகளார்

தமிழ்த் தெய்வமான முருகனை வணங்கிவந்த தமிழர்கள், வேல்தான் முருகன். முருகன்தான் வேல் என்றும், வேல் வேல் வெற்றி வேல் என்றும் போற்றி புகழ்ந்து வந்துள்ளார்கள். வேலையும் மயிலையும் வாழ்த்தி, ''வேலும் மயிலும் துணை'' என்றும் அனு தினமும் கூறி வந்துள்ளார்கள். ''வேலை வணங்குவதே என் வேலை'' என்றும் பெரியோர்கள் கூறுவார்கள்.

சுமார் 50 ஆண்டுகளுக்கு முன் எல்லா கிராமங் களிலும் ''சத்ரு சங்கார வேற்பதிகம்'' தெரிந்தவர்கள் நிறைய பேர் இருப்பார்கள். இதனை ஓயாது சொல்லி உருவேற்றி விபூதி கொடுத்தால் தீராத வியாதிகளும் தீரும் என்பது அசைக்க முடியாத நம்பிக்கையாகும். இந்நாளில் இந்நூல் கிடைக்கவில்லை. எனவே அதனைச் சற்றே குறிப்பிடுகிறேன்.

''அப்பமுடன் அதிரசம் பொரிகடலை துவரை வடை'' என ஆரம்பிக்கும் இப்பாடல் ''தா்க்கமிட நாடினரைக் குத்தி எதிர் ஆடிவிடும் சத்ரு சங்கார வேலே'' என்று முடியும். இப்பதிகத்தில் 10 பாடல்கள் இருக்கும். முருகன் மேல் நம்பிக்கை உள்ளோர் இப்பாடலை பெற்றுப் பாடி வந்தால் தீராத வியாதிகளும் தீருவது திண்ணம்.

அன்பர்கள் முருகனுக்கு பிரார்த்தனை செய்து கொண்டு நிறைவேற்றும் வேல் எடுத்தல், வேல் நடுதல், வேல் குத்திக் கொள்ளுதல் முதலான சமய வழிபாட்டுக் கூறுகளையும் தெரிந்துகொள்ள மேலே தொடருவோம்.

வேல் என்பது முருகனுக்கு மட்டுமே அமைந்த சிறப்பான ஆயுதம் ஆகும். சூரபத்மன் முதலான கொடிய அரக்கர் சேனையை வெல்ல போர்க்கோலம் பூண்ட முருகப் பெருமானிடம் சிவபெருமான் பதினோரு உருத்திரர்களையும் முறையே தோமரம், கொடி, வாள், அங்குசம், மணி, தாமரை, தண்டம், வில், மழு, அம்பு, குலிசம் எனும் பதினோரு ஆயுதங்களாக்கி அளித்தார். பின்பு ஐந்து பூதங்களையும் ஒருசேர அழிக்கக்கூடியதும், யார் மேல் விடுத்தாலும் அவருடைய வன்மைகளை யும் வரங்களையும் கெடுத்து உயிரை போக்கக் கூடிய தும் ஆகிய வேலாயுதத்தைப் படைத்து அதனை முருகக் கடவுளிடம் கொடுத்தார்.

இதனை,

ஆயதற் பின்னர் ஏவில் முதண்டத்து
ஐம்பெரும் பூதமும் அடுவது
ஏய பல்லுயிரும் ஒருதலை முடிப்பது
ஏவர்மேல் விடுக்கினும் அவர்தம்
மாயிருந் திறலும் வரங்களும் சிந்தி
மண்ணயில் உண்பது எப்படைக்கும்
நாயகமாவது ஒரு தனிச் சுடர்வேல்
நல்கியே மதலை கைக் கொடுத்தான்

எனவரும் கந்தபுராணச் செய்யுளால் அறியலாம்.

இவ்வாறு சிவபெருமான் வேல் கொடுத்த வர லாற்றை கூறுவது, புராண மரபு எனப்படும்.

ஆனால் நடைமுறையில் அன்னை பராசக்தியே முருகப் பெருமானுக்கு வேலாயுதத்தை வழங்கினார் என்று கூறுகிறோம். அதையொட்டியே ஆலயங்களில் அம்பிகையின் சந்நிதியில் முருகன் வேல் வாங்கும் விழா என்ற விழாவினை நடத்தி வருகிறோம். இப்படி கூறும் மரபு ஐதிக மரபு எனப்படும்.

ஸ்ரீஅருணகிரிநாத சுவாமிகள் உமாதேவியார் முருகனை அழைத்து வாழ்க, வாழ்க என்று சொல்லி வேல் அளித்ததைப் போற்றி, திருச்செந்தூர் திருப்புகழில்

''எம்புதல்வா, வாழி, வாழி எனும்படி
வீரான வேல் தர'' என்று குறிப்பிடுகிறார்.

இப்படி இரண்டு கருத்துக்கள் இருப்பதால் இரண்டையும் ஒன்று சேர்த்து முருகனுக்கு சிவபெருமான் வேலைத்தர பராசக்தியான உமாதேவியார் அதற்கு அளப் பரிய சக்திகளைக் கொடுத்தாள் என்று ஆன்றோர் கூறுவர். இதற்கு எடுத்துக்காட்டாக திருக்கோலக்கா என்ற தலத் தில் திருஞான சம்பந்தருக்கு சிவபெருமான் தாளம் தர, அதற்கு பெருமாட்டி ஓசை தந்து ''ஓசை கொடுத்த நாயகி'' என்று பெயர் பெற்று விளங்குவதைக் கூறுவர்.

எது எப்படியாயினும் தாய் தந்தையர் அளிக்க முருகப் பெருமான் வேலைப் பெற்றார் என்பதும், பகை வரை அழித்து உலகிற்கு நன்மை பயக்க சிவசக்தி அரு ளாக வேல் பிறந்ததும் எண்ணி நாம் மகிழ வேண்டும்.




திருவண்ணாமலையில் நடைபெற்ற ஸ்ரீ அருணகிரிநாதர் விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும். அருள்ஞானி கல்பாக்கம் அடிகளாரும்

அம்மனின் சக்தியாகிய நாகத்தை பிடித்து நிறுத்திப் பார்த்தால் அது வேல் போன்று இருப்பதை நாம் காணலாம். அம்மனின் சகல சக்திகளான நாகமே வேல் ஆகும் என்றும் கூறலாம்.

பொதுவாக முருகப் பெருமானை வணங்குபவர்கள் ஒழுக்கச்சீலராகவும் தூய்மை காப்பவர்களாகவும் இருக்க வேண்டியது அவசியமாகும். அதுபோலவே அவர்கள் முருகப் பெருமானை எழுந்தருளி வைத்து வழிபடும் இடங்களும் தூய்மை உடையதாக இருக்க வேண்டும்.

இதனால் முருகப் பெருமானது அருளைவேண்டி உபாசிக்க வேண்டும் என்ற அன்புடையவர்கள் போதுமான நியமங்களைக் கடைபிடிக்க முடியாதபோது முருகப் பெருமானின் திருவுருவத்திற்குப் பதில் அப் பெருமானின் வேலாயுதத்தை எழுந்தருள வைத்து வழிபடுகிற வழக்கத்தை நெடுங்காலமாகக் கடைபிடித்து வருகின்றனர். முருகனை வழிபடுவதும், அவனது வேலை வழிபடுவதும் ஒன்றேயாகும்.

செம்பு, வெள்ளி, பொன் ஆகிய உலோகங்களில் ஏதாவது ஒன்றை ஆறு அங்குலத்திற்கு குறைவான வேலாக செய்து அதனைப் பீடத்தில் வைத்து திருவாசி இட்டு பூசைக்கு ஏற்க வேண்டும். இந்த வேலுக்கு இயன்ற வரை தினமும் அல்லது செவ்வாய், வெள்ளி, கிருத்திகை, சஷ்டி முதலிய சிறப்பு நாட்களில் அபிஷேக அலங்காரம் செய்து வழிபட வேண்டும்.

சஷ்டி விரதத்தை மேற்கொள்பவர்கள் வேலாயுதத்தை முறையாக வணங்கி வந்தால் சகல நன்மைகளும் கிடைக்கும் என்பர்.

வேலாயுதம் உள்ள இடத்தில் தீமைகள் எதுவும் அண்டுவதில்லை. அதற்குத் தீட்டுபடுதல் என்பது இல்லை. அது அன்பர்களின் குற்றங்களைப் பொறுத்து குணங்களை மட்டும் ஏற்று அருள் பாலிப்பது. எனவே முருகனடியார்கள் வேல் பூஜையை விரும்பி ஏற்றுக் கொள்கின்றனர்.

வேலாயுதத்திற்கு பால், தயிர் முதலியவற்றால் அபிஷேகம் செய்து சிவந்த ஆடை, மலர்கள் சூட்டி அர்ச்சனை செய்ய வேண்டும். பின்னர் வேலின் புகழை விளக்கமாக கூறும் வேல் வகுப்பு, வேல் வாங்கு வகுப்பு, வேல் அலங்காரம், வேலாயுத சதகம் ஆகியவற்றை இயன்றவரை பாராயணம் செய்யலாம்.

கல்கண்டு, உலர்ந்த பழங்கள், சர்க்கரை ஆகியவற்றைப் படைத்து தூபதீபம் காட்டித் தண்டனிட்டு வணங்க வேண்டும்.

இப்படி வேலாயுதத்தை வணங்கி வருபவர்களுக்கு அகப்புறப் பகைகள் நீங்கி, சுகமான வாழ்வு கிட்டும் என்பது அசைக்க முடியாத உண்மையாகும்.

வேலை வணங்குவதையே வேலையாக கொள்ள வேண்டும்.

''சிக்கலில் வேல் வாங்கிச் செந்தூரில் சம்மாரம்'' என்பது தமிழ்நாட்டில் வழங்கும் பழமொழியாகும். இது முருகப் பெருமான் சிக்கல் என்னும் திருத்தலத்தில் பராசக்தியிடம் இருந்து வேலாயுதத்தைப் பெற்றுப் பின்னர் சீரலைவாய் என்னும் திருச்செந்தூருக்குச் சென்று அங்கு பாடிவீடு அமைத்துத் தங்கி, அங்குக் கடலின் நடுவே இருந்த மகேந்திரபுரத்தில் வசித்து வந்த சூரபதுமனோடு போர் புரிந்து, அவனை வென்று அவன் உடலை இரு

கூறாக்கி, ஒன்றை மயிலாகவும், மற்றதைச் சேவலாகவும் ஆக்கிக் கொண்டதை நினைவுகூறும் வரலாறு ஆகும்.

தஞ்சை மாவட்டத்திலுள்ள சிக்கல் என்னும் திருத்தலத்தில் இதனை நினைவு கூறும் வகையில் இப்போதும் ஐப்பசி மாத வளர்பிறை சஷ்டியை ஒட்டி நடைபெறும் மகாகந்தர் சஷ்டி திருவிழாவின் ஐந்தாம் நாளில் வேல் வாங்குதல் என்னும் சிறப்பு நிகழ்ச்சி கொண்டாடப்படுகிறது.

இந்த விழா நாளில் சிக்கலில் எழுந்தருளியுள்ள சிங்காரவேலர் என்னும் முருகப் பெருமான் இவ்வூர் ஆலயத்தில் உள்ள அன்னை பராசக்தியாம் வேல் நெடுங் கண்ணியின் சன்னதிக்கு எழுந்தருளி அவளிடமிருந்து வேலை வாங்கிக் கொண்டு திரும்பவும் கொலுமண்டபத்திற்கு எழுந்தருளுகின்றார்.

அப்போது மிகச் சக்தி வாய்ந்த வேலாயுதத்தை பெற்றதால் அவருடைய முகத்தில் வியர்வைத் துளிகள் அரும்புகின்றன என்கின்றனர். வேல் வாங்கும்போது உலோகத்திருமேனியாக விளங்கும் சிக்கல் சிங்கார வேலனின் முகத்தில், மனிதர்கள் தேகத்தில் தோன்றுவது போல வியர்வை நீர் முத்துக்களாகத் தோன்றுவது இயற்கையின் அதிசயங்களில் ஒன்றாகப் போற்றப்படுகின்றது.

இந்தத் தெய்வீகக் காட்சியைக் காண ஆயிரக் கணக்கான மக்கள் பெருந்திரளாக கூடுவதைக் காணலாம்.

சிக்கலில் வேல் வாங்கும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெறுவது போல சென்னையை அடுத்த சின்னம்பேடு என்று அழைக்கப்படும் சிறுவாபுரியிலும் வேல் வாங்கும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெறுகிறது. இங்குள்ள முருகப் பெருமான் கந்தர் சஷ்டி ஐந்தாம் நாள் விழாவில் வீதிவலம் வந்து ஆலயத்தின் உள்ளே அமைந்துள்ள உண்ணாமுலையம்மன் சந்நிதிக்கு எழுந்தருளுகின்றார். அங்கு அன்னை குமாரனுக்கு வேல் அளிக்கும் ஐதீகம் நடத்தப்படுகிறது. இவ்விழாவில் முருகனுக்கு அணிவிப்பதற்கென நவரத்தினங்கள் இழைத்த வேல் ஒன்று உள்ளது.

ஸ்ரீமத் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளால் அருளப்பெற்றது 'வேல் அலங்காரம்' என்னும் நூலாகும். இது 102 பாடல்களைக் கொண்டது. இதில் உள்ள ஓர் பாடலில் வேலாயுதமே சிறந்த ஆயுதம் என்று கூறுகிறார்.

"வாலாயுதக் கரத்து இந்திரன் ஆதியர் வாழவைத்து
மாலாயுதத்தின் அவமானம் தீர்த்து மடிவில் சிவன்
சூலாயுதத்தில் துணையாய் குகன் கையில்
தோன்றும் வெற்றி
வேலாயுதத்திற்கு மேலாயுதம் என்ன வேறில்லையே''

முருகன் கையிலுள்ள வெற்றி வேலாயுதத்திற்கு மேலே வேறு ஒரு ஆயுதமும் இல்லை என்று குறிப்பிடுகிறார்.

மிகப் பழைய காலத்தில் குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த தமிழ் மக்கள் முருகனை முக்காலமும் உரைக்கும் தெய்வமாகப் போற்றினர். முருகன் கோயிலில் பூசை செய்யும் அர்ச்சகன் வேலன் எனப்பட்டான். அவன் தனக்குரிய அடையாளமாக நீண்ட வேலை கையில் ஏந்தி இருப்பான். எனவே அவன் அப்பெயர் பெற்றான் என்றும் கூறலாம்.

மக்கள் தங்கள் குறையைத் தீர்க்க வேலனை அழைத்து வெறியாட்டு நிகழ்த்துவர். வேலன் மீது முருகப் பெருமான் இறங்கி வந்து எதிர்காலத்தை உரைப்பான் என்று நம்பினர். இதன் மூலம் தங்களின் நோய்களைத் தீர்த்துக் கொண்டதுடன் எதிர்காலத்தையும் அறிந்தனர் என்று இலக்கியங்கள் கூறுகின்றன.

முருகன் வழிபாட்டில் வேல் குத்திக் கொள்ளுதல் தனி இடத்தைப் பெறுகிறது. வேல் குத்திக் கொள்ளுதல் பலவகைப்படுகின்றன. சுமார் 2 அங்குல நீளமுள்ள செப்பினால் செய்த சிறுசிறு வேல்களை 108,308 என்ற எண்ணிக்கையில் வரும்படி மார்பு, தோள், முதுகு ஆகியவற்றில் குத்திக் கொள்ளுவர். நீண்ட வெள்ளி அல்லது செம்பு வேலை கன்னத்தின் ஒருபக்கம் குத்தி மறுபக்கத்தில் வெளிவரும்படி செய்வர், சிலர் நாவில் வேலைக் குத்திக் கொண்டு நேர்த்திக் கடன் செலுத்துவார்கள். இதற்குத் தாள் போடுதல் என்று பெயர்.

மலேசியாவில் நடைபெறும் பத்துமலை முருகன் கோயில் தைப்பூசத் திருவிழாவில், நீண்ட வேல்களைக் கன்னத்தில் குத்திக் கொண்டு பக்தி சிரத்தையுடன் நேர்த்திக் கடன் செலுத்தும் சீனர்களையும், மலாய்காரர்களையும் காணலாம். கையளவு வேலைக்கூட கன்னத்திலே சொருகி கந்தன் பேரைச் சொல்லி கசிந்து கண்ணீர் பெருகி வலம் வரும் சீனர்களைக் காண்பதே புண்ணியம் என்பர். இங்கு நடக்கின்ற வேல் குத்தி காணிக்கை செலுத்தும் நிகழ்ச்சி பார்ப்பதற்கு அதிசயமாகவும் அற்புதமாகவும் இருக்கும்.

கந்தர் சஷ்டி கவசத்தை எழுதிய தேவராய சுவாமிகள், நம்மை வேல் எப்படி எப்படியெல்லாம் காக்க வேண்டும் என்று பாடியிருப்பதைப் பாருங்கள்.

★ உன் திருவடியே உறுதியென்று எண்ணும்
என் தலை வைத்து உன் இணையடி காக்க
என் உயிர்க்கு உயிராம் இறைவன் காக்க
பன்னிருவிழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க

★ பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதி செவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க

★ முப்பத்து இருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என் இளம் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க

★ சேர் இளமுலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம் பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க

★ வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுற செவ்வேல் காக்க
நாணாம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க

★ வட்டகுதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியிணை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க.

★ முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின் கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக்கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க

★ எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க

★ ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்கத் தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட''

என்று பற்பல வேல்களைத் தனக்குத் துணையாக அழைக்கிறார். அது அவருக்கு மட்டுமல்ல அந்த பாடலைப் பாடும் நம் அனைவருக்கும்தான் என்று கூற வேண்டும்.

அக்காலத்தில் போருக்குச் செல்லும் படைவீரர்கள் தங்கள் மனதில் வீர உணர்ச்சி கொப்பளிக்கவும், அடுத்தவர்களுக்கு உற்சாகமூட்டவும் பலவிதமான முழக்கங்களைச் செய்வார்கள். இவ்வகையில் தமிழகத்து வீரர்கள் தங்கள் வீர முழக்கமாக ''வெற்றிவேல் வீரவேல், வேல் வேல் வெற்றிவேல்'' என்று முழக்க மிடுவார்கள்.

அக்காலத்திலே தமிழகத்திலே 'வேல் கோட்டம்' என்ற பெயரில் கோயிலும் இருந்ததாக அறிகிறோம்.

பழமுதிர்சோலையான ஆறாவது படைவீடு மதுரையை அடுத்து அமைந்துள்ளது. இது மலைமீது காட்டுக்குள் அமைந்துள்ளதாகும். அங்குப் பழங்காலத்தில் வேல் ஒன்று அமைக்கப்பட்டு பூசிக்கப்பட்டு வந்தது. இதற்கு வேற்கோட்டம் என்றே பெயர். பின்னாளில் திருமுருக கிருபானந்த வாரியார் தலைமையின் கீழ் ஓர் அமைப்பினர் வள்ளி தெய்வானையுடன் கூடிய முருகனைப் பிரதிஷ்டை செய்தார்கள் என்று கூறவேண்டும்.

ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள், வேல் வகுப்பு, வேல் வாங்கு வகுப்பு, வேல் விருத்தம் என்ற பல தலைப்புகளில் பல பாடல்களைத் திருப்புகழுடன் பாடியுள்ளார். அனைத்தும் பாடுவதற்கு இனிமையானவை.

★★★

## வினை நீங்க அருளும் திருநீறு

வந்த வினையும் வருகின்ற வல்வினையும்
கந்தனென்று கூறக் கலங்குமே - செந்திநகர்
சேவக என்று திருநீறு அணிவார்க்கு
மேவ வாராதே வினை

# கருடாழ்வார்

- விஷ்ணுதாசன், எஸ். சுந்தரம்

''குங்குமாங்கித வர்ணாய குந்தேந்து தவளாயச
விஷ்ணு வாஹே நமஸ்துப்யம் பக்ஷிராஜாயதே நம''

## முன்னுரை

கருடன் திருமாலுடைய பரம பக்தன். முதுமையும், மரணமும் அடையாதவன். மிகவும் பலசாலியானவன். பட்சிகளுக்கெல்லாம் தலைவன். அதனால் பட்சிராஜன் (பறவை அரசன்) என்றும், ராஜாளி என்றும் பெயர் பெற்றவன். இவன் இல்லாத வைணவ ஆலயங்களே கிடையாது. எல்லாம் வல்ல எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனின் எதிரில் அஞ்சலி செய்தவாறு நிற்பவன். திருமாலையே தன் தோளில் சுமந்து செல்பவனாயிற்றே. இவனுடைய பெருமைகளை சொல்லவா வேண்டும்? மகா வீரம் பொருந்திய ஆஞ்சநேயரையே சிறிய திருவடி என்றுதான் கூறுகிறோம். ஆனால் பெரிய திருவடி என்று வைணவர்களால் பேசப்படுவது இவன் ஒருவனே.

## கருடனின் பிறப்பு

கருடனுடைய தந்தையின் பெயர் கச்யப மஹரிஷி. இவருக்கு இரண்டு மனைவிகள். முதல் மனைவியின் பெயர் வினதை. இவளுக்கு இரண்டு பிள்ளைகள். முதல் பிள்ளையின் பெயர் அனூரு என்ற அருணன். இவன் சூரிய பகவானின் தேரோட்டி. இரண்டாவது பிள்ளைதான் வைணவர்களால் போற்றப்படுகின்ற கருடன். இவனை பகவான் என்றும், ஆழ்வார் என்றும் வைணவம் சிறப்பாகக் கூறுகிறது. கருடன் அவதாரம் செய்த நாள் ஆடி ஸ்வாதி. வைணவ ஆலயங்களில் இந்நாளை கருட ஜெயந்தி என்னும் பெயரில் விழாவாக கொண்டாடுவார்கள்.

கச்யப மஹரிஷியின் இரண்டாவது மனைவியின் பெயர் கத்ரு. கருடனுக்குச் சிற்றன்னை. இவளுக்கு கொடிய விஷமுள்ள ஆயிரம் பாம்புகளே பிள்ளைகளாகப் பிறந்தன. கத்ரு என்பவள் கருடனின் தாய் வினதையை தனக்கு அடிமைபோல கருதி வந்தாள். இதனால் கருடனுக்கு சிற்றன்னை மீதும் அவளுடைய பிள்ளைகளான பாம்புகள் மீதும் அதிக வெறுப்பு உண்டானது. பாம்பு வர்க்கத்தையே அழிக்கக் கூட முற்பட்டான். அன்றையநாளிலிருந்து கருடனுக்கும் பாம்புக்கும் எப்போதுமே பகை.

*பாம்புக்குப் பகைவன்:* கருடனைக் கண்டாலே பாம்பு பதுங்கிவிடும். வானத்தில் கருடன் பறக்கும்போது அதன் நிழல் பாம்பின்மேல் பட்டாலே பாம்பு தன் சக்தியை இழந்துவிடும். திருமால் சயனித்துக் கொள்ளும் ஆதி சேடனுக்கும் கூட, ஏன்? சிவபெருமான் அணிந்திருக்கும் பாம்பு பட்டாளத்திற்கும் கூட கருடனைக் கண்டால் பயம் வந்துவிடுமாம். இதற்கு ஒரு கதையும் உண்டு.

ஆதிசேடன் மீது எம்பெருமான் பள்ளி கொண்ட சமயத்தில் கருடன் அங்கு வந்தான். மற்ற சமயத்தில் கருடன் அங்கு வந்தால் பாம்பு பயந்து நடுங்கி பதுங்கி விடும். இப்போது பகவன் ஸ்ரீமந் நாராயணன் அல்லவா அதன்மீது சயனித்திருக்கிறார். அந்த தைரியத்தில் ஆதி சேடன் கருடனைப் பார்த்து ''கருடா சௌக்கியமா?'' என்று கேட்டது. ''இருக்கிற இடத்தில் இருந்தால் எல்லாம் சௌக்கியமே'' என்று கருடன் கூறியதும் ஆதி சேடன் வெட்கித் தலைகுனிந்தான்.

## கருடனின் அணிகலன்கள்

சிவபெருமானைப் போலவே கருடன் பாம்புகளை ஆபரணங்களாக அணிந்துள்ளான் என்று கருட புராணம் குறிப்பிடுகின்றது. கருடனின் இடக்கையில் ஆதிசேடன் வளையல்களாகவும், வாசுகிப்பாம்பு பூணுலாகவும், அரையில் அணியாக தட்சகனும், மாலையாகக் கார்க்கோடகனும், வலது காதில் பத்மனும், இடது காதில் மஹா பத்மனும், திருமுடியில் சங்க பாலனும், வலது தோள் பட்டையில் குளிகன் என்ற எட்டு நாகங்களும் ஆபரணங்களாக உள்ளன.

## கருடனின் வல்லமை

கருடன் மிகப் பெரிய பலசாலி. எம்பெருமானுக்கு எல்லா அவதாரங்களிலும் உதவக் கூடியவன். ராமாயணத்தில் இந்திரஜித்தினுடைய நாகாஸ்திரத்தினால் கட்டுண்ட லட்சுமணனை விடுவித்தது கருடன்தான் என்பதை யாரும் மறக்க முடியாது.

ஸ்ரீவைகுண்டத்தில் எட்டு விமானங்கள் உண்டு. கருடன் திருவேங்கடமுடையானுடைய ஆணையின்படி ஒரு விமானத்தை எடுத்து வந்து திருமலையில் வைத்தான். அவ்விமானத்தை தான் கருடாசலம் என்றும் கிரிடாசலம் என்றும் வழங்குகின்றோம். அதில்தான் திருவேங்கடமுடையான் எழுந்தருளியிருக்கிறார்.

பாற்கடலைக் கடைவதற்கு மத்து தேவைப் பட்டது. மந்திர மலையை மத்தாக உபயோகிக்க வேண்டி அதைக் கொண்டு வரும்படி எம்பெருமான் கருடனுக்குக் கட்டளையிட எம்பெருமானின் உத்தரவுப்படி மந்திர மலையை தன் முதுகில் சுமந்து கொண்டு வந்து பாற் கடலில் வைத்தான். திருப்பாற்கடலை கடைய மந்திர மலை மத்தாகவும், வாசுகிப் பாம்பு கயிறாகவும் உப யோகப்பட்டது.

### கருடனின் வசீகரத் தோற்றம்

கருடனுக்கு நான்கு கரங்கள் உண்டு. இரண்டு கரங்கள் அஞ்சலி செய்து கொண்டும், ஒரு கையில் அமிர்த கலசமும், மற்றொரு கையில் குடையும் இருக்கும். திரு மாலை சுமக்கும்போது மட்டும் இரண்டு கைகள் மட்டுமே. கம்பீரமான எடுப்பான தோற்றமும், அருள் ததும்பும் முகமும், கவலைக்குறி இல்லாத தெய்வீகத் தோற்றத்துடன் கருடன் காணப்படுகின்றான். தனது இரண்டு இறக்கைகளை அகலமாக விரித்து மண்டல மிட்டு வானத்தில் பறப்பான். சிறகுகளை விட உடல் பருத்திருக்கும். வளைந்த புருவங்கள், உருண்டை கண் கள், நீண்ட மூக்கு, அழகான முகம் இவைகளை உடைய வன். மூன்று கிளைகளாகப் பிரிந்திருக்கும் கருடனின் இறக்கைகள் ருக், யஜுர், சாமம் என்று மூன்று வேதங் களாகக் கருதப்படுகின்றன.

கருடனின் நித்ய வாசஸ்தலம் திருப்பாற்கடல். அவன் சூரிய மண்டலத்திலும் ஞானிகளின் உள்ளத்தி லும் இருப்பவன். பாமர மக்களைக் காப்பதில் திரு மாலைப் போன்றவன். அறம், பொருள், இன்பம் முதலியவைகளை நாடுபவர்களுக்கு அவற்றைத் தந்து உதவுபவன்.

தமிழகத்தில் பொதுவாக அனைத்து வைணவ ஆலயங்களிலும் நான்கு பக்க மதில் சுவர் மூலைகளி லும் கருடனின் உருவம் இருக்கும்.

### சாதாரண கருடன்

பொதுவாக வானத்தில் பறக்கும் சாதாரண கருட னும் தெய்வீகத் தன்மை வாய்ந்ததுதான். காரணம் அதுவும் கருடனின் பரம்பரை வாரிசுதான். சாதாரண கருடனின் நிறம் பழுப்பு. கழுத்து வெள்ளை. இந்த வகை கருடன் மணிக்கு 105 கி.மீ. வரை பறப்பதாக பறவை ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். வைணவர்கள் இந்தக் கருடப் பறவையைத் தான் கருட தரிசனம் செய்ய எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். வீர வைணவர்கள் கருட தரிசனம் பார்க்காமல் உணவு உட்கொள்ள மாட் டார்கள்.

### கருட தரிசனம்

வானத்தில் கருட பகவானைப் பார்ப்பதும், அவன் குரலைக் கேட்பதும் நல்ல சகுனமாகும். அதி காலையில் கருட தரிசனம் நமக்குக் கிடைத்தால் நினைத்த காரியம் உடனே நமக்குக் கைகூடும். ஒவ்வொரு நாளும் கருடனை தரிசிப்பதால் ஏற்படும் பலன்களைப் பார்ப் போம்.

| | | |
|---|---|---|
| ஞாயிறு | - | வியாதி நீங்கும், பாவங்கள், மனக்குழப் பங்கள் தீரும். |
| திங்கள் | - | குடும்ப சுகம், தேக ஆரோக்கியம் |
| செவ்வாய் | - | பகைவர்களின் எதிர்ப்பு நீங்கும். சிக்கல் தீரும். |
| புதன் | - | காரிய அனுகூலம், மன மகிழ்ச்சி |
| வியாழன் | - | தீர்க்காயுள் |
| வெள்ளி | - | லட்சுமி கடாட்சம் |
| சனி | - | மோட்சம் |

### கருடக் கொடி:

கருடக் கொடி மிகவும் விசித்திரமானது. கருடக் கொடியை கையில் வைத்திருப்பவர்கள் நோய்கள், செய் வினை, பில்லி சூனியம் முதலியவைகளுக்கு ஆளாக மாட்டார்கள். கருடக் கொடி பெரிய கனமான இரும்பு களையும், திறக்காத பூட்டுகளையும் பட்டென விடச் செய்யும்.

அமெரிக்காவின் நாட்டுச் சின்னம் கருடன். அத னால்தான் அந்நாடு செழிப்புடன் விளங்குகிறதுபோலும். அவர்கள் கருடனை Golden Bird (தங்கப் பறவை) என்றும் Lucky Bird (அதிர்ஷ்டப் பறவை) என்றும் கூறுவார்கள்.

### கருடனின் பெயர்கள்

கருடன், பட்சிராஜன், விநதபுத்திரன், நாககர்த் தன், வாயு வாஹனன், புள்ளன்.

பெரியாழ்வார் கருடனை கறை, அணி மூக் குடைய பிள்ளை என்றும், திருமங்கையாழ்வார் ''பொன் மலை மேல் எழுந்த மாமுகில் போன்றுளர் வந்து காணீர்'' என்றும், ஆண்டாள் புள்ளரையன், புள்ளூர்தி என்றும் போற்றியிருக்கிறார்கள்.

### முடிவுரை

திருமாலின் வாஹனமான கருட பகவானை நாம் வணங்கி சகல பலன்களையும் பெற்று திருமாலின் திருவடிகளை அடைவோமாக!

# கூரத்தாழ்வார்

- திருமதி கோமதி ராகவன் FCA

''மொழியைக் கடக்கும் பெரும்புகழான்,
வஞ்சமுக்குறும்பாம்
குழியைக் கடக்கும் நம் கூரத்தாழ்வான் சரண்
கூடியபின்
பழியைக் கடத்தும் இராமானுஜன் புகழ் பாடியல்லா
வழியைக் கடத்தல், எனக்கு இனி யாதும் வருத்தமன்றே''

(இராமானுச நூற்றந்தாதி - 7)

திருவரங்கத்தமுதனார் இராமானுஜமுனிவரைப் பாடத்தக்க கவித்திறன் தனக்கில்லை என்றும், தமது ஆசார்யரும் எம்பெருமானாருடைய சிஷ்யருமான கூரத்தாழ்வார் பெரும் புகழையுடையவர், படுகுழியில் வீழ்த்தும் முக்குறும்புகளையும் வென்றவர், அவருடைய திருவடிகளைச் சரண் அடைந்தபிறகு எம்பெருமானாருடைய புகழினைப்பாடி, அதனால் அவரால் தகாது என நீக்கப்பட்டவைகளைக் களைந்து நெறிபொருந்திய வழியினைப் பின் பற்றுதல் சாத்தியமாயிற்று என்கிறார். இவ்வாறு கூரத்தாழ்வாரது பெருமை அளவிடற்கரியது, அவரது கடாட்சம் கிடைக்கப்பெறின் எம்பெருமானாரது திருவடிகளை எளிதில் பற்றலாம் என்று கூறுகிறார்.

மேற்கூறிய அம்முக்குறும்புகளாவன; செல்வத்தாலும் தொழிலாலும் உயர்குடிப்பிறப்பு, சிறந்த ஒழுக்கம் மற்றும் கல்விமான் எனும் இவற்றினால் ஏற்படும் அகந்தைகள். வடநூலார் ''பஞ்சக்கிலேசம்'' என்று ஐந்து வகைக் குற்றங்களில் அகந்தையை ஒன்றாகக் கருத்தில் கொண்டனர் (பரிமேலழகர் - குறள் 38). இம்முக்குறும்புகளையும் கூரத்தாழ்வார் வென்றவர் என்றவாறு.

ஸ்ரீராமானுஜ முனிவரிடம் முதன் முதலில் சிஷ்யர்களாக ஆச்சரயித்தவர்கள் கூரத்தாழ்வாரும் முதலியாண்டானும் ஆவார்கள். ''ஸ்ரீ பாஷ்யகார மங்களம்'' என்னும் நூலில் ''ஸ்ரீவத்ய சின்ஹ நாதாய யதிராஜாய மங்களம்'' என்று ''கூரத்தாழ்வாரது ஆசார்யரான இராமானுஜ முனிகளுக்கு மங்களம்'' என்று கூரத்தாழ்வார் எதிராஜருடன் சேர்ந்தே பேசப்படுகிறார். ''ஸ்ரீ ராமானுஜ - ஸுப்ரபாதம்'' என்னும் சுலோகங்களில் ''ஸ்ரீவத்ய சின்ஹ குருரானத - திவ்யகாத்ர:'' என்று ''கூரத்தாழ்வாரின் குருவாகிய இராமானுஜர்'' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஸ்ரீவடுக நம்பிகள் அருளிய ''ராமானுஜ அஷ்டோத்தர - சத - நாம - ஸ்தோத்ரம்'' என்னும் நூலில் ''பவித்ரீக்ருத - கூரேச: பாகிநேய - த்ரிதண்டக:'' என்ற கூறப்பட்டிருக்கிறது. ஆதலால் யதிராஜருக்குக் கூரத்தாழ்வார் பவித்ரமாகவும், முதலியாண்டான் திரிதண்டமாகவும் விளங்குகின்றனர் என்பது தெளிவாகிறது. எம்பெருமானாரிடம் இணை பிரியாமல் இருக்கும் காரணத்தால் கூரத்தாழ்வார், முதலியாண்டான் தனியன்களையும் எம்பெருமானார் தனியனான


''யோநித்ய மச்யுத.....
ராமானுசஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே''

உடன் சேர்ந்தே அநுஸந்திப்பது வைணவ சம்பிரதாயத்தில் வழக்கம்.

திவ்யப்பிரபந்தம் நாலாயிரப் பாசுரங்களுக்கும் சிறந்த வியாக்கியானம் அளித்த ''வியாக்கியானச் சக்கரவர்த்தி' யான பெரியவாச்சான் பிள்ளையின் சிஷ்ய பரம்பரையில் வந்த யமுநாசார்யர் ''தத்வபூஷணம்'' என்னும் நூலில் ''ஆச்சார்யர்களுக்கு எல்லை நிலம் கூரத்தாழ்வான்'' என்கிறார். ஏனெனில் நல்ல நிலத்தில் தான் நல்ல விதையிட்டவுடன் பயன் பயக்கும். உத்தம சிஷ்யனானவன் ''சரீரம், அர்த்தம், ப்ராணம்'' மூன்றையும் ஸத்குருவிற்கு நிவேதனம் செய்தவன் என்கிறார். அவ்வாறே ஸ்ரீபாஷ்யகாரருக்கு உத்தமசிஷ்யராகத் திகழ்ந்தவர் கூரத்தாழ்வார். திருக்கோட்டியூர் நம்பிகளிடமிருந்து சரம ஸ்லோகத்தின் அர்த்தத்தைப் பெற்ற எம்பெருமானாரிடம் நம்பிகள் அவ்வர்த்தத்தைத் தகுதியில்லாதவர்கட்குச் சொல்லக் கூடாதென்று பணித்தார். அதற்கு ஸ்ரீராமானுஜர் ''அடியேன் அப்படிப் பட்டவர்களுக்குச் சொல்லமாட்டேன், பகவானிடம் பேரன்புடையவரான கூரத்தாழ்வானுக்கு மட்டுமே சொல்லாதிருக்க முடியாதே'' என வினவ நம்பிகளும் ஆழ்வானைப் பரீட்சை செய்த பிறகு உபதேசிக்குமாறு கூறினார். இதனாலும் ஸ்ரீபாஷ்யகாரர் கூரத்தாழ்வாரிடம் கொண்டிருந்த அளவிடற்கரிய அபிமானம் விளங்கும்.

இவ்வளவு சிறப்புமிக்க வைணவ மகா புருஷரான கூரத்தாழ்வார் காஞ்சியின் அருகேயுள்ள ''கூரம்'' என்னும் ஷேத்திரத்தில் ஆழ்வார் என்ற சான்றோர்க்குத் திருக்குமாரராய் ஸௌம்ய வருட தை பஞ்சமி ஹஸ்தமன்று அவதரித்தார். இவரது தந்தையார் இவருக்கு ''ஸ்ரீவத்ஸ சின்ஹநர்'' என்று பெயரிட்டார். பெரும் செல்வந்தராகத் திகழ்ந்த இவர்கள் திருமாலிருஞ்சோலை என்னும் புண்ய க்ஷேத்திரத்திலிருந்து கூரத்திற்கு வந்தவர்கள்.

''பயன் மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கட் படின்'' - என்று திருவள்ளுவர்



கூறுவது போல வறியோர்க்கு ஈவதையே பேரறிவாள ராகிய கூரத்தாழ்வார் தமது நயத்தக்க நாகரிகமாகக் கொண்டு வாழ்ந்து வந்தார். ''கொள் எனக் கொடுத்தல் உயர்ந்தன்று'' (புறம் - 204). அதாவது ஒருவன் இரப்பதன் முன்னே அவன் குறிப்பை முகத்தான் உணர்ந்து இத னைக்கொள்வாயாக என்று சொல்லித்தான் இரந்து கொடுத்தல் ஒருவற்கு உயர்ந்தது என்றும் ''கருவி வானம் போல வரையாது சுரக்கும் வள்ளியோய் நின்னே'' என்றும் கொடையைச் சிறப்பித்தலை அறியலாம்.

இவ்வாறிருக்கையில் அந்நகரத்தில் வாழ்ந்து வந்த ஒரு வைணவ தம்பதியினர் அவர்களின் பெண்ணுக்கு விவாகதோஷமிருப்பதால் திருமணம் செய்து வைக்க இயலாது வருந்துகின்றனர் என்ற செய்தி கூரேசருக்கு எட்டியது. செவியுற்ற மறுநாளே கூரேசர் சீர்வரிசைகள் கொண்டு சென்று அப்பெண்ணை மணம் முடிக்கக் கோரினார். அப்பெண்ணே ஆண்டாள் என்ற திருப் பெயரை உடைய கூரத்தாழ்வாரைக் கைத்தலம் பற்றிய தார பத்தினியாவாள்.

வைணவ தத்துவத்தில் கரைகண்ட ஞானம் பொருந்திய கூரத்தாழ்வார் கிருஹஸ்தராகவிருந்தும் ஸந்யாஸ ஆச்ரமத்திலிருப்பவர்போல் எல்லாப் பற்றுக் களையும் விட்டவராகவும்

''புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல்அரிதே
ஒப்புரவின் நல்ல பிற'' (குறள் 213)

என்றவாறு அருள் உலகமாம் ஈத்துவக்கும் இன்பம் இனிதே எய்தப் பெற்றவராயும் நன்நீர்மை பொருந்திய வாழ்க்கை நடத்தி வரலானார்.

இவ்வளவில் உடையவர் ஸந்யாஸம் பூண்டு காஞ்சியினின்று ஸ்ரீரங்கம் சேர்ந்தமை கேள்வியுற்று கூரேசர் ஸ்ரீவரதராஜப் பெருமானையும் பெருந்தேவித் தாயாரையும் கண்டு களித்து விட்டு தம்மிடம் இருந்த பொருள் அனைத்தையும் வறியோர்க்கு அளித்து விட்டு ஆண்டாளுடன் திருவரங்கம் சென்றடைந்தார். உடைய வர் திருவடிகளிலே சென்று தெண்டன் ஸமர்ப்பித்து அவரது சிஷ்யரானார்.

உடையவரது பூர்வாச்சார்யரான ஆளவந்தார் பிரம்ம ஸூத்திரங்களுக்கு விசிஷ்டாத்வைதத்தின் அடிப் படையில் இராமானுசர் விரிவுரை எழுதவேண்டும் என்று திருவுள்ளம் கொண்டிருந்தார். அதன்படியே உடைய வரும் போதாயனர் எழுதிய விருத்தியுரை காஷ்மீரில் சாரதாபீடத்தில் உள்ளதாக அறிந்து அது கிடைக்கப் பெறின் கிரந்தம் எழுதுவதற்குப் பேருதவியாகவிருக்கும் என நினைத்துக் கூரேசருடன் காஷ்மீரம் சென்றார். (கஸ்யபமுனிவரின் பெயரால் ''காஷ்மீர்'' என வழங்கப் படலாயிற்றென்று கூறுவர்). அங்கிருந்த அத்வைத பண்டிதர்கள் போதாயன விரிவுரையைக் கொடுக்க இயலாதெனக் கூறிவிட்டனர். சாரதாதேவியின் பேரரு ளால் போதாயன கிரந்தமிருக்குமிடம் உடையவருக் குப் புலப்பட்டது. எம்பெருமானாரும் கூரேசரும் போதா யனவுரையுடன் திருவரங்கம் நோக்கிப் புறப்பட்டனர். இதனையறிந்த காஷ்மீர் பண்டிதர்கள் அவர்களைப் பின் தொடர்ந்து உரையைப் பெற்றுச் சென்றுவிட்டனர். அப்போது இராமானுசர் முழுதும் படிக்கவில்லையே என வருந்த, கூரேசர் தாம் இரவெல்லாம் கிரந்தத்தைப் படித்தாகிவிட்டதாகவும் அதனை அங்கேயே சேவிக்கவா அல்லது திருவரங்கத்திலா என விண்ணப்பிக்க உடைய வர் பெருமகிழ்ச்சியடைந்தார். கூரேசர் ஒரு முறை படித்தால் மனதில் கிரஹித்துக்கொள்ளும் பேராற்றல் படைத்தவர். உடையவர் ஸ்ரீபாஷ்ய விசிஷ்டாத்வைத உரை கூறிக்கொண்டுவர கூரேசரே எழுதிக்கொண்டு வந்து ஆளவந்தாரின் திருவுள்ளம் பூர்த்தியாவதற்கு உறுதுணையாக இருந்தார். தம் சிஷ்யர்களில் ஸ்ரீவைஷ் ணவ தர்சன கிரந்த உரைகள் அருள, உடையவர் கூரத்தாழ்வாரையே பெரும்பாலும் தமக்குதவிடப் பணித் தார் என்று அறிந்தோர் கூறுவர்.

திருவரங்கத்தில் கூரேசர் உஞ்சவிருத்தி செய்து வாழ்ந்து வந்தார். ஒரு நாள் மழை காரணமாக அவரால் வெளியில் செல்ல இயலவில்லை. அவ்விரவு கூரேச ருக்கும் ஆண்டாளுக்கும் உணவின்றிக் கழிந்தது. அப் போது அரங்கன் கோயில் அரவணை மணியோசை கேட்கவே ஆண்டாள் மனதுள் ''உன் பக்தன் பசியோ டிருக்கிறார், நீர் அமுது செய்வது எவ்வாறு?'' எனத்

துயருற்றாள். ஸ்ரீமந் நாராயணனே அகத்திலும் புறத்திலும் உள்ளான் என்பதை நம்மாழ்வார் ''அகத்தினன் புறத்தனன் அமைந்தே'' என்கிறார். அவ்வாறே மற்றோரிடத்தில் ''செய்வார்களைச் செய்வேனும் யானே என்னும்'' என் கிறார். அந்தர்யாமியாக உள்ள திருவரங்கன் அர்ச்சகர் மனதில் தேர்ன்றி நிவேதனப் பிரசாதத்தைக் கூரேசரிடம் சேர்க்கச் செய்தார். பிரசாதத்தைப் பெற்ற கூரேசர் தம் மனைவியிடம் அவள் மனதில் ஏதேனும் நினைத்தாளா என வினவி நடந்ததையறிந்தார். இருவரும் அப்பிரசாதத் தையுட் கொண்டனர். ''கொடிய வினை தீர்ப்பேனும் யானே என்னும்'' என்று நம்மாழ்வார் ஸ்ரீமந்நாராயணன் நம்வினைகளைத் தீர்ப்பவன் என்று கூறியது போல அத்தம்பதியினரின் புத்திரதோஷமும் அம்மகாபிரசாதத் தால் நீங்கியது. கூரேசருக்குப் பராசரரும் வியாசரும் 'சுபக் கிருத்'வருட வைகாசி அனுஷத்தில் தவப்புதல்வர்களாக அவதரித்தனர். முன்பு ஆளவந்தார் ''வ்யாசாய விஷ்ணு ரூபாய'' என்றவாறு பகவான் கிருஷ்ணன் அருளிய ஸ்ரீமத் பகவத்கீதையை உலகிற்கு அளித்த வேத வியாசருக்கும் அவரது தந்தை பராசரமுனிவருக்கும் நன்றி தெரிவிக்கும் பொருட்டு வைணவச்சான்றோரின் புதல்வர்களுக்கு ''பராசரர் - வியாசர்'' என்று பெயரிடவேண்டும் எனத் திருவுள்ளம் கொண்டிருந்தார். அவ்வாஞ்சையால் அவ் வாறே திருநாமம் சூட்டினார்.

பராசரபட்டரே ஓராண்வழி குருபரம்பரையில் எம்பெருமானார் சிஷ்யரான எம்பாருக்கு அடுத்தபடி ஆசார்ய பதம் வகிப்பவர். ஸ்ரீரங்கராஜஸ்தவம், ஸஹஸ்ர நாம பாஷ்யம், அஷ்டசுலோகி, பிரணவ விவரணம் போன்ற அரும்பெரும் கிரந்தங்கள் அருளிச் செய்தவர்.

''ராமானுஜார்ய - திவ்யாஜ்ஞா வர்த்ததாம் அபி வர்த்ததாம்'' என்று விசிஷ்டாத்வைத நெறி செழித் தோங்கி வளர்வதைக் காணப்பொறுக்காத சோழ அரச னும் மந்திரி நாலூரானும் அனைத்து வைணவ வித் வான்களும் சிவபெருமானைவிட மேலான தெய்வ மில்லை என்று ஓலையில் கையொப்பமிட வேண்டும் என்று ராஜ கட்டளை பிறப்பித்தனர். நாலூரான் அரச னிடம் ஸ்ரீராமானுஜரும் கையொப்பமிட வேண்டும் என்றான். இதனாலன்றோ திருவள்ளுவரும்

''பழுதுஎண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர்
எழுபது கோடி உறும்'' என்றார்.

சோழனும் ஓலையனுப்பி இராமானுஜரை சபைக்கு அழைத்தனன். ஓலையை முதலில் பெற்றுக் கொண்ட கூரத்தாழ்வார் நிலைமையின் கடுமையை உணர்ந்து உடையவரின் திரிதண்ட காஷாயங்களைத் தாம் தரித்துக் கொண்டு தம்முடைய வெள்ளை வஸ்திரங்களை உடைய வருக்காக வைத்துவிட்டு பெரிய நம்பிகளுடன் ராஜ சபை செல்லத் தீர்மானித்தார். மற்ற சிஷ்யர்களிடம் ஸ்ரீராமானு சர் கூரேசரது வெள்ளை வஸ்திரங்களை அணிந்து உடனே திருவரங்கத்திலிருந்து சென்று விடும்படி தாம் விண்ணப் பித்ததாகக் கூறச்சொன்னார். ஸ்ரீராமானுஜரும் ஆளவந்தார் ஆஞ்ஞைப்படி வளர்ந்த விசிஷ்டாத்வைதம் காக்க கூரேசரது வெள்ளையுடுத்தி முதலியாண்டானுடன் திருநாராயணபுரம் சென்றார். கூரேசரும் நம்பிகளும் கையொப்பம் செய்ய மறுக்கவே அரசன் அவர்களது நேத்திரங்களைப் பாழ்படுத்துமாறு கட்டளையிட்டான். இதன் பிறகு ராஜசபையிலிருந்து திருவரங்கம் வரும் வழியில் நம்பிகள் திருநாடலங்கரித்தார். கூரேசர் ஆண் டாள், குமாரர்களுடன் திருமாலிருஞ்சோலை வந்து தங்கி னார். கூரத்தாழ்வாரை ''தர்சனத்துக்காக தர்சனத்தைக் கொடுத்தவர்'' என்று கூறுவர். திருமாலிருஞ்சோலையில் கூரேசர் ஸ்ரீஸ்தவம், சுந்தரபாஹுஸ்தவம், அதிமானுஷ ஸ்தவம், ஸ்ரீவைகுண்ட ஸ்தவம் என்னும் நான்கு துதி நூல்களையியற்றினார்.

பகவத் அபசாரத்தைக் காட்டிலும் பாகவத அபசாரம் செய்தவர்களை சுதர்ஸனாழ்வார் தண்டிப்பார் என்பதற்கு அம்பரீஷ், கூரேசர் போன்றவர்களின் வாழ்க் கைத் தத்துவத்தால் அறியலாம். சோழனும் கழுத்தில் புண் வரக்கண்டு கிரிமிகண்டன் என அனைவராலும் நிந்திக்கப்பட்டு மாண்டு போனான். சோழ நாட்டு இள வரசன் அரசனின் செயலுக்காக வருந்தி வைணவ சான் றோரிடம் மன்னிப்புக் கோரினான். உடையவரின் திரு வடிகளிலே தெண்டன் சமர்ப்பித்து திருவரங்கம் பெரிய கோயில் நிர்வாகத்தை ஒப்படைத்தான்.

இவ்வளவில் கூரேசரும் திருவரங்கம் அடைந் தார். பன்னிரண்டு ஆண்டுகள் திருநாராயணபுரத்தில் ஸ்ரீசம்பத் குமாரருக்குக் கைங்கர்யம் செய்தபிறகு இராமா னுஜரும் திருவரங்கம் திரும்பினார். திருவரங்கனைச் சேவித்தவுடன் கூரேசரின் திருமாளிகைக்கு எழுந்தருளி னார். பின்பு அவரிடம் காஞ்சி பேரருளாளனிடம் துதி பாடி கண்கள் மீண்டு வரப்பிரார்த்தனை செய்யுமாறு கூறினார். கூரேசரும் உடையவருடன் காஞ்சி சென்று ''வரதராஜ ஸ்தவம்'' என்னும் நூலினைப்பாடி திவ்ய நேத்ரம்பெற்றார். திவ்ய நேத்திரம் பெற்ற கூரேசர் ஆசார்யருடன் திருவரங்கம் திரும்பி கைங்கர்யம் செய்து வரலானார். கூரேசரது ஆசார்ய நிஷ்டை இத்துடன் நின்று விடவில்லை. உடையவருக்கு முன்பு தாம் திருப்பரம பதம் அடைந்து ஆசார்யரை எதிர்கொண்டழைக்க வேண்டும் என்ற திருவுள்ளம் கொண்டவராய் அரங்கன் முன் சுலோகம் பாடி ஸ்ரீவைகுண்ட பதம் வேண்டினார். அரங்கனும் கூரேசருக்கும் அவர் சம்பந்தமுடை யோர்க்கும் அவ்வாறே அளித்தனம் என்றார். இராமானு ஜரும் உத்தமசிஷ்யரான கூரத்தாழ்வாரால் தமக்கும் ''வானோங்கு பெருவளம்'' நிச்சயமாயிற்று என்று ஆழ் வாரைப்போற்றினார். கூரேசர் திருநாடலங்கரித்த சில நாட்களுக்குப் பிறகு எம்பெருமானார் பராசர பட்டரை அரங்கன் முன் அழைத்துச் சென்று வைணவ சித்தாந்த நிர்வாகத்தைப் பட்டரிடம் ஒப்படைப்பதாகத் திருவுள் ளம் விண்ணப்பித்தார்.

இவ்வாறாக கூரத்தாழ்வாரின் வைபவமும் நிறை வடைந்தது. ''மொழியைக் கடக்கும் பெரும் புகழான்'' என்பதையே சான்றோர் வடமொழியில் ''கதம் வர்ண் யதே கூரநாதக'' என்பர்.

# பெரியபுராணம் ஒரு சமூகப் பார்வை

– டாக்டர் இரா. செல்வக்கணபதி, எம்.ஏ., பி.எட்., பிஎச்.டி.,
மயிலாடுதுறை

தமிழ் இலக்கிய வரலாற்றில், சேக்கிழார் அருளிய பெரியபுராணத்திற்குத் தனியான ஒரு சிறப்பு உண்டு. சைவ சமயத்தின் பன்னிருதிருமுறைகளுள், அது ஒன்றாக இருந்தாலும், அதில் சமயக் கூறுகளை விடச் சமுதாயக் கூறுகள் மிகுதி.

தமிழ் இலக்கியங்களை, அவற்றின் உள்ளீடு கருதி, இரண்டாகப் பகுக்கலாம். ஒன்று, தமிழ் இலக்கியங்கள். இரண்டு, தமிழில் எழுதிக்கொள்ளப்பட்ட இலக்கியங்கள். கற்பனையாயினும், வரலாறாயினும், காப்பியக் கரு, தமிழ் மண்ணில் இருந்து எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தால், அதனைத் தமிழ் இலக்கியம் என்று கூறல் பொருந்தும்.

கதைக்கரு, பிற மண்ணில் இருந்து எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தால், அதனைத் தமிழில் எழுதிக்கொள்ளப்பட்ட இலக்கியம் எனலாம். சிலப்பதிகாரமும் பெரியபுராணமும், நூற்றுக்கு நூறு தமிழ் இலக்கியங்கள். அதிலும், சிலப்பதிகாரக் கதைக்கரு, கற்பனையா? வரலாறா? என்பதில் எந்தத் தெளிவும் இல்லை.

பெரியபுராணம், தமிழ் மண்ணில் வாழ்ந்த, மானுடர்களின் வாழ்க்கையின் மேல் பின்னப்பட்டிருப்பதால், இதனைச் சமய நோக்கில் ஆராய்வதோடு சமூக நோக்கிலும் ஆராய்வது பெரிதும் பொருத்த முடையதாகும்.

சங்க காலத்தில், மனிதனைப் பாடு பொருளாகக் கொண்ட இலக்கியங்கள் பெருவாரியாகத் தோன்றின. ஒன்றிரண்டைத் தவிர, அவற்றுள் கடவுளர் உவமையாகவே வந்து சென்றனர்.

சிலப்பதிகாரத்திலும் இம்முறை தொடர்ந்து, இருண்ட காலத்திற்குப் பின், கி.பி. 7ஆம் நூற்றாண்டை அடுத்துத் தமிழ்க் கவிதையின் பாடுபொருளாகக் கடவுளர் முன் நிறுத்தப்பட்டனர்.

அதன்பின், ஐந்து நூற்றாண்டுகளுக்குப் பிறகு, கி.பி. 12-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், பெரிய புராணத்தில் மீண்டும் மானுடம் பாடுபொருளாக உருக் கொண்டது.

பெரியபுராணத்தில், கடவுளர்களோடு மனிதர்களும் உறவாடி வருதலைக் காண்கிறோம். என்றாலும், இதில் மானுடத்திற்கே முதன்மை தரப்பட்டுள்ளது என்பதை, இனங்கண்டு காட்ட வேண்டுவது, சமய வாதிகளின் கடமையாகும்.

இறைவன் இடைஇடையே வந்தாலும், செயற்கரிய செயல் செய்த மானுடர்களின் முயற்சிக்கு, வாழ்த்துக் கூறவே இறைவன் வந்ததாகச் சேக்கிழார் இனம் காட்டுகிறார்.

தமிழில் இறைவனும், உயிர்களும் கைகோர்த்து நடமாடிய இலக்கியங்கள் இரண்டு. ஒன்று, பெரிய புராணம், மற்றொன்று, திருவிளையாடல் புராணம். முன்னது, மானுடரின் செயற்கரிய செயல்கள், விண்ணில் இருந்த இறைவனை மண்ணுக்கு ஈர்த்து வந்த வரலாறு. பின்னது, சிற்றுயிர் பால் கொண்ட கருணையால் இறைவன் தாமே விண்ணில் இருந்து மண்ணுக்கு இறங்கி வந்து கருணை பாலித்த வரலாறு.

இவ்வகையில், சமயத் துறையில் நின்று, மனித எத்தனத்திற்கு எல்லை காட்டிய, அறுபத்து மூன்று மானுடர்களின் மனஉறுதியைப் பெரியபுராணம் பேசி நிறைகிறது.

எந்தச் சமயமாயினும், இறைக்கோட்பாட்டை ஏற்று நிற்குமானால், அந்தச் சமய நூல்களுள், அற்புத நிகழ்வுகள் என்பன தவிர்க்க இயலாதன. சமயவாதிகள், தம் நூல்களுள், ஆங்காங்கே பதிவு செய்யும் அற்புதங்களை, எளிய மக்களைச் சமயத்துறையின்பால் ஈர்ப்பதற்குரிய ஒரு உத்தியாகவே கையாண்டுள்ளனர்.

உன்னதமான நூல்களில், இத்தகு அற்புதங்கள் உண்மையா? பொய்யா? நடக்குமா? நடக்காதா? என்று ஆராய்ச்சியில் காலம் கழிப்பதை விடுத்து, அவற்றின் சமூகப் பயன்பாட்டைத் தேடி வெளிப்படுத்துவதையே, அறிஞர்கள் தம் கடமையாகக் கருத வேண்டும்.

சேக்கிழாரின் பெரியபுராணத்தில், இத்தகு தேடல்களுக்கு ஏராளமான களங்கள் அமைந்துள்ளன. அரவு தீண்டி இறந்த தன் தாய்மாமனை நினைத்து அழுத, ஒரு பெண்ணின் கண்ணீரை மாற்றி, இறைவன் துணையோடு,



திருமருகலில், திருஞானசம்பந்தர், இறந்த மாமனை மீண்டும் உயிர்ப்பித்துத் தருகிறார் என்கிறது பெரிய புராணம்.

இங்கே, இறந்தவன் பதிகம் பாடினால் பிழைப் பானா என்ற ஆராய்ச்சியை விடுத்து, ஏதேனும் சமூகக் கூறுகள் இக்களத்தில் உள்ளனவா என்று தேடுதல் பய னுடையதாகும் என்ற நோக்கில் தேடினால், சேக்கிழார், இங்கே ஒரு சிறுகுறிப்பு தருகிறார். காதலன் பிரிவால் கண்ணீர் விட்டு அழுத பெண், தன் அழுகைக்கு இடையே ''எங்கிருந்தோ வந்த பாம்பு, மாமனே, உன்னைத் தீண்டும் உரிமை பெற்றிருந்தது; ஆயினும், ஊரறிய உனக்கும் எனக்கும், மணம் நிகழாத காரணத்தால், இறந்து கிடக்கும் உன் மேனியைத் தீண்டி அழும் பேறு, எனக்கு இல் லையே'' என்று பேசுவதைக் காண்கிறோம்.

சேக்கிழார், இங்கே கூற வரும் சமூகச் செய்தி பெரிது. செத்தவன் உயிர் பிழைத்தான் என்பதை விட, சமூகம் போற்றும் உயர் ஒழுக்கங்களைப் பின்பற்றி நிற்பார்க்கு, இறைவன் திருவருள் உண்டு என்பதை இக்களம் உறுதி செய்து நிற்கிறது. சமயம், சமூக ஒழுங் கிற்கு என்றும் அரணாக நிற்கவல்லது என்ற சமூகத் தேடல் இங்கே ஒளிவிட்டுப் பிரகாசிக்கிறது.

இன்று, சாதி ஒழிப்பிற்குக் கலப்புத் திருமணங் களை ஊக்குவிக்க வேண்டும் என்று பரவலாகப் பேசக் காண்கிறோம். இதன் முதல் அடையாளங்களைப், பெரிய புராணம் பொதித்து வைத்துள்ளதைச் சமயவாதிகள் இனங்கண்டு காட்டத் தவறினர்.

சிவாலயங்களில், பெருமானின் திருமேனியைத் தீண்டிப் பூசிக்கும் சிவாசாரியர் மரபினர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். திருவாரூரில், தந்தை பெயர் இன்னது என்று தெரியாத, கணிகையர் குலத்தில் வந்தவர் பரவையார். இவ்விருவரும், திருக்கோயில் வளாகத்தில் சந்தித்துக் காதல் கொள்ள, ஆரூர்ப் பெருமானே அவர்களை முன் னின்று கூட்டுவிக்கிறான் என்கிறது பெரியபுராணம். இது, கலப்புத் திருமணத்தின் முதல் அடையாளம் அல்லவா!

சீர்காழியில், சுமார்த்த பிராமணக் குடும்பத்தில் பிறந்த திருஞானசம்பந்தருக்கு, மயிலாப்பூரில், வணிகர் குலத்தில் வந்த சிவநேசர், தம் மகள் பூம்பாவையை மணம் முடிக்க விரும்பினார் என்ற பெரியபுராணக் கூற்று, அக்காலச் சமூக அமைப்பில், சாதீயம் திரு மணத்திற்கு ஒரு தடையாக இருந்திருக்கவில்லை என் பதைப் பேசிக் காட்டுகிறது அல்லவா!

காந்தியடிகள் காலத்தில், தமிழகத்தில், ஆதி திராவிடப் பெருமக்களைத் திருக்கோயில்களுக்குள் அனுமதிக்கலாம் என்ற நிலை, நீண்ட போராட்டத்திற்குப் பிறகு உருப்பெற்றதை, நாடு அறியும்.

இந்த நிகழ்வுக்குப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர், ஒரு ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த, இசை வாணர் திருநீலகண்டயாழ்ப்பாணர் என்பவரை, பிராமண ராகிய திருஞானசம்பந்தர், தாம் செல்லும் திருக்கோயில் களுக்கெல்லாம், கருவறை வரை அழைத்துச் சென்று, தம் பாடல்களுக்கு யாழ் மீட்டச் செய்தார் என்ற செய்தியை

நாம் முறையாகச் சமூக ரீதியாக வெளிப்படுத்தியிருந்தால், இந்த மண்ணில், காந்தியடிகள் காலத்தில், ஓர் ஆலயப் பிரவேசத்திற்கு அவசியம் நேர்ந்திருக்காது.

சேக்கிழார், ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த கணவனையும், மனைவியையும், ஓர் அந்தணர், தம் இல்லத்தில் ஆகுதி செய்யும் இடத்தில், இரவு நேரத்தில் தங்க வைத்தார் என்றும், அதனால், வேள்வித் தீ முன்னிலும் சிறப்பாக வலம் சுற்றி எழுந்தது என்றும் பதிவு செய்து காட்டுகிறார்.

பெரியபுராணம் தந்த ஏற்றத்தால், ஆதிதிராவிடக் குடியைச் சேர்ந்த பலரது திருமேனிகள், திருக்கோயில் வளாகத்துள், அறுபத்து மூவராக நிற்கும் பெருமிதம் நினைவு கூர்ந்து மகிழத்தக்கது.

இன்று, பெண் விடுதலை பற்றிச் சமூகத்தில் பெரிதாகப் பேசப்படுகிறது. சேக்கிழார், தம் காப்பியத்துள் எந்தவொரு பெண்ணையும், ''அவள்'' என்று குறிப்பிடாது, ''அவர்'' என்றே பன்மை விகுதி கொடுத்துச் சிறப்பித்திருப்பதை நாம் இனங்கண்டு காட்டத் தவறியிருக்கிறோம்.

ஒரு பெண்ணுக்கு, வாழ்வின் தொடக்கத்திலேயே பிரச்சினை தோன்றினால், அவள், சமூகத்தில் தனித்து எங்ஙனம், தலை நிமிர்ந்து வாழ முடியும் என்பதை, திலகவதியார் வரலாற்றிலும், இல்லறத்தின் இடையில், கணவனால் பிரச்சனை வருமானால், வாழ்க்கைப் போக்கை மாற்றி அமைத்துக் கொண்டு, பெண் எப்படிச் சமூகப் பெருமிதத்தைப் பெற முடியும் என்பதைக் காரைக்கால் அம்மையார் வரலாற்றிலும், கணவனே பிரச்சனையானால், அவனையும் சரிப்படுத்தித் தன் வழியில் நடை பழக வைத்து, வாழ்வை வளமாக்கிக் கொள்ளும் பெண்மையின் சாதுர்யத்திற்கு, மங்கையர்க்கரசியார் வரலாற்றையும், நாம் ஏன் முன்னோடியாகக் கொள்ளல் கூடாது?

இந்திய விடுதலை வரலாற்றில், தனி மனிதச் சத்தியாக்கிரகத்தையும், பகைவர்களைப் பணிவிக்கத் தன்னை வருத்திக் கொள்ளும் உண்ணாநோன்பையும், போராட்டக் கருவிகளாகக் காந்தியடிகள் முன்நிறுத்தினார் என்பது, நாம் அனைவரும் அறிந்ததே.

ஆனால், 1,300 ஆண்டுகளுக்கு முன்பு, தமிழ் நாட்டில், ஒரு சமயவாதி, மன்னர் அழைத்தபோது, ''நாம் யார்க்கும் குடியல்லோம்'' என்று கூறி ஆட்சியாளர்க்கு எதிராகக் குரல் கொடுத்த பெருமிதத்தையும், அதில் இழையோடும் தனிமனிதச் சத்தியாக்கிரகத்தையும், நாம் ஒளியூட்டத் தவறி விட்டோம்.

சமணர்கள், எச்சில் இலைகளாலும், குப்பைக் கூளங்களாலும் பழையாறையில் இருந்த சிவாலயத்தை மூடிவிட்ட நேரத்தில், உண்ணாநோன்பு மேற்கொண்டு, அரசன் உதவியோடு அவற்றை அகற்றி, இறைவனைத் தரிசித்த அப்பர் அடிகள் மன உறுதியை, நம்மில் யாரும் காந்தியடிகளிடம் வியந்து கூறி மகிழ்ந்ததாகத் தெரியவில்லை.

இன்று, தனி மனித ஒழுக்கம் என்பது, கேள்விக்குரியதாக மாறிவிட்டிருக்கிற அவலத்தைப் பார்க்கிறோம். உலகின் மிகப்பெரிய தலைமையை அலங்கரிப்பவர்கள், ஒழுக்கச் சிதைவில் சிக்கித் திணறுவதைச் செய்தித்தாள்கள் பறைசாற்றுகின்றன.

ஒரு ஆணும், பெண்ணும் கூடி நடத்தும் இல்லற வாழ்வில், அவர்கள் இல்லத்தில், பெண் தனித்திருக்கும் போது, அன்னிய ஆடவன், அந்த இல்லத்திற்குள் புகுவது கூடாது என்ற தமிழர் பண்பாட்டைச் சேக்கிழார் பதிவு செய்து காட்டுகிறார்.

சமயவாதிகள் - துறவிகள், ஒழுக்கம் தவறி, அவமதிப்பிற்கு உள்ளாகும் காலம் இது. இறந்த மகளை, இறைவன் திருவருளால் உயிர்ப்பித்துத் தந்த திருஞானசம்பந்தரிடம், ''என் மகளைத் தாங்கள் மணந்துகொள்ள வேண்டும் என்று'' தந்தை சிவநேசர் கூறியபோது, 16 வயது திருஞானசம்பந்தர், இப்பெண்ணுக்கு, இறைவன் திரு வருளால், மீண்டும் உயிர் தந்த நான், இவளுக்குத் தந்தை ஆக முடியுமே தவிர, கணவனாதல் எங்ஙனம் கூடும் என்ற கேட்ட சமயத் தலைவர்களின் பண்பாட்டை நாம் உலகுக்குப் பறைசாற்ற வேண்டும்.

திருநாட்டியத்தான்குடியில், தம் மகள் இருவரையும் மணந்து கொள்ளுங்கள் என்று, தந்தை கோட்புலி வழங்க முன் வந்தபோது, அவர்கள் இருவரையும், தன் அருகழைத்து, அமரச் செய்து, இவர்கள் இருவரும் என் பெண்கள் என்று கூறித் தம்மைச் ''சிங்கடியப்பன்'', ''வனப்பகையப்பன்'' என்று பேசி மகிழ்ந்த சுந்தரமூர்த்தி சுவாமிகளை, நாம் சமயத் தலைவர்களுக்கு ஒழுக்கம் கற்பிக்க முன்னோடியாக நிறுத்த வேண்டும்.

இப்படி சேக்கிழாரின் பெரியபுராணத்தில் இருந்து, சமூகம் கற்க வேண்டிய பாடப் பகுதிகள், ஏராளம் எஞ்சியிருப்பதை நம்மால் காண முடிகிறது.

எந்தவொரு இலக்கியத்தையும், நிகழ்கால வாழ்வோடு இணைத்து, இன்றைய சமூகத்திற்கு அது தரும் பாடங்களும், படிப்பினைகளும், இவை, இவையென்று இனம் கண்டு காட்டல், சமயம் சார்ந்த தமிழ் அறிஞர்களின் மாபெரும் கடமையாகும்.

★★★

# கம்பரின் இராமாவதாரம்

– கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

### 6. ஒரே இராமனாகி விட்டார்!

சீதா ராமர்களின் திருமண விழாவினைக் காண உலகமே திரண்டு வந்து மிதிலையில் கூடியது. இராம பிரானுக்கு கங்கை முதலான தெய்வீக நீர் நிலைகளி லிருந்து நீர்கொண்டு வந்து மங்கல நீராட்டினர். ஸ்ரீவைண வர்கள் இடும் திருநாமம் இரண்டு பக்கங்களிலும் இறைவன் திருவடிகள் இருப்பதாகக்கொண்டு நடுவில் திருமகளின் ஸ்ரீ சூர்ணம் என்ற சிவந்த நிறப்பொடியையும் அணிவர். திருமண் தரித்தோர் திருமண் நாயகனான திருமாலின் அருளைப் பெற்று அப்பெருமானுடைய பரம பதத்தையடைந்து, பிறவிப் பிணியுண்டாக்கும் இவ்வுலகத்திற்கு மீண்டும் பிறவியெடுக்க மாட்டார். பாற்கடல் பாம்புப் படுக்கையை விட்டு மனித உருவம் தாங்கி வந்த இறைவன் மனிதருக்கு வழிகாட்டுவது போல் தானே திருமண் அணிந்து கொண்டார் என்கிறார் கவிஞர்.

என்று நான்முகன் முதல் யாரும் யாவையும்
நின்ற பேரிருளினை நீக்கி நீணெறி
சென்று மீளாக்குறி சேரச்சேர்த்திடும்
தன் திருநாமத்தைத் தானும் சாத்தியே.

(சைவர்கள் நான் மனத்தினாலும், வாக்கினா லும் செயலிலும் தவறே செய்யாது சுத்தமானவனாக இருப்பேன் என்பதைக் காட்டவே நெற்றியில் மூன்று வெண்பட்டைகளாகத் திருநீறணிகிறார் என்பர் பெரியோர்)

இரவும் பகலும் சஞ்சரித்த சந்திரசூரியர்கள் ஒளி மிகுந்த குண்டலங்களாக மாறி சீதாபிராட்டியின் நிலை மையை இராமபிரானின் திருச்செவிகளில் கூறவந்த மாதிரியிருந்ததாம். இனி நீண்டு வளர்ந்து மூவுலகங்களை அளக்க முடியாது எனக் கட்டுப்படுத்துவது போல் திருவடிகளில் சிலம்பையணிவித்தனர். மணக்கோலம் கொண்டு இராமபிரான் மணமேடைக்கு வந்ததைக் காண ஆகாய வீதியில் இந்திரன் இந்திராணியுடனும் சிவ பெரு மான் பார்வதி தேவியுடனும் பிரமன் நாமங்களுடனும் கூடி நின்றனர்.

இந்திரன் சசியோடும் எய்தினான் இளஞ்
சந்திர மௌலியும் தையலாளொடும்
வந்தனன்: மலரயன் வாக்கினாளுடன்
அந்தரம் புகுந்தனன் அழகு காணவே.


திருமாலும் திருமகளுமே சீதாராமர்களாக பூர்ணாவதாரமாக வந்தனர் என்பது குறிப்பு. வசிட்டர் அவ்விடம் வந்து தருப்பை விரித்து மங்கல கலசம் வைத்து தெய்வீக அக்னிமூட்டினார். அப்போது இராம பிரான் சீதாபிராட்டியுடன் மணமேடை மீது அமர்ந்தார். யோகமூர்த்தியான இறைவன் போகக்கனியாக விளங்கிய சீதாபிராட்டியுடன் அமர்ந்தார். உலகவாழ்வில் கலந்து பக்குவம் பெற்றுப் பின்னர் துறவு நிலையான யோக நிலையை அடையவேண்டும் என அறிவித்தது போன் றிருந்தது அச்செய்கை. மனிதன் எப்படி வாழவேண்டும் என நடந்து காட்டுவதற்காக வந்த இராமபிரான் அன் புருவான சீதாபிராட்டியுடன்

தென்புலத்தார் : தெய்வம் : விருந்து : ஒக்கல் தான்
என்றாங்கு
ஐம்புலத்தார் ஓம்பல் தலை.

என்று வள்ளுவனின் மறைப்படி மறைந்தோர், தெய்வம், விருந்தினர், உறவினர், தன் குடும்பம் ஆகியவற்றைக் காக்கும் கடமையைச் செய்து காட்ட இல்லறத்தைத் தழுவினார்.

ஜனகமகாராஜன் குளிர்ந்தநீர் எடுத்து வந்து சீதா பிராட்டியின் திருக்கரத்தை இராமபிரானின் திருக்கரத்தில் சேர்த்து வைத்து ''திருமகள் எங்கு செல்லுகிறாளோ அங்கே அவளைத் தொடர்ந்து செல்லும் செல்வம் போல் உனை இனி என்றும் பிரியாது சீதாபிராட்டி உன்னுடன் இருப்பாள்'' என மந்திரம் கூறி சீதாபிராட்டியை இராம பிரானுக்கு மனைவியாக ஒப்படைத்தார்.

திருமணத்தில் கைப்பிடித்தல் என்பதுதான் மிக முக்கியமான சடங்காக இருந்திருக்கிறது. கம்பனுக்கு வெகு காலத்திற்கு முந்திய நூலான (நாலாயிர திவ்யபிர பந்தம்) நாச்சியார் திருமொழியில் கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன் தோழி நான் என்றேபாடியுள்ளார். தமிழிலக்கியத்தில் சில நூல்களில். ''முற்று மங்கல நாண் சாத்தி என்று பரஞ்சோதியாரின் திருவிளையாடற் புராணத்தில் தாலிகட்டியதாகக் கூறப்படுகிறது. பாணிக் கிரகணம் (கைப்பிடித்தல்) என்பது முக்கியமான சடங்கு) கைப்பிடி நாயகன் என்பார் பட்டினத்தார். வந்தெனைக் கரம்பற்றியவைகல்வாய் என்று சீதாபிராட்டி கூறு கிறாள். திருமங்கல நாண் மாட்டும் வழக்கம் இருந்தது என்பதைத் தனது இராமாயணத்திலேயே கம்பர் தாலி ஐம்படை தழுவு மார்பு என்றும் மங்கல அணி என்றும் மங்கையர் மங்கலத்தாலி என்ற மாதிரி பல இடங்களில் குறிக்கிறார். ஆனால் சீதாபிராட்டியின் திருக்கழுத்தில் இராமபிரான் தாலி கட்டினார் என்ற செய்தி இல்லாத போதிலும் அனுமான் இலங்கையில் சீதாபிராட்டியின்



திருக்கழுத்தில் திருமங்கலியத்தைக் கண்டு அம்மையே! உலகின் பெண்கள் திருமங்கலியம் அணிந்து கொண்டதால் மற்ற அலங்கார அணிகளையும் அணிந்து கொள்வது வழக்கம். ஆனால் உன் விஷயத்தில் மற்றைய ஆபரணங்கள் உன் திருமங்கலியத்தையும் இராமபிரானையும் காப்பாற்றின. அவ்வணிகளை, நீ இராவணனால் கவரப்பட்டுவரும்போது, கழற்றி எங்கள் மீது எறிந்தாய். நாங்கள் அவற்றை இராமபிரானிடம் காட்ட அவர் மகிழ்ந்து உயிரை விடாமல் உள்ளார் என்பது குறிப்பு) இதிலிருந்து சீதாபிராட்டியின் திருக்கழுத்தில் மங்கல நாணை இராமபிரான் பூட்டினான் என்பது தேற்றம். கம்பனிடம் இதுபற்றி ஒரு பக்தர் கேட்க ''உலகத்துப் பெண்கள் திருக்கழுத்துக்களில் அம்மை திருமகளே திருமங்கலியமாக விளங்குகிறாள். அவள் கழுத்தில் திருமங்கலியம் பூட்டப்பட்ட விதத்தை எவ்வாறு சொல்வது?''

மானணி நோக்கினார் தம் மங்கலக் கழுத்துக் கெல்லாம்
தானணியான போது தனக் கணியாது மாதோ?

என்ற தன் வாக்கையே காட்டியருளினான் என்பர் பெரியோர்.

புராணவரலாறுகளில் வரும் திருமணங்கள் அனேகமாக பங்குனி உத்திரத்தன்று நடந்ததாகப் பெரியோர் கூறுவர். சீதாபிராட்டியின் திருமணம் பங்குனி உத்திரத்தன்று நடைபெற்றது என்பதையும் கம்பர் குறித்தருளினார்.

கருணையின் உருவமே பெண். எவர் வருந்தினாலும் தாங்கமாட்டாள். திருமணதினத்தன்று மணமகன் ''பெண்ணே! உனக்குக் கருணை என்றும் இருக்கட்டும். ஆனால் தவறான எண்ணத்துடன் உன்னை எவர் அணுகி எவ்வளவு கெஞ்சிக்கண்ணீர் விட்டால் கூட, அப்போது மட்டும் உன் இரக்கத்தை விட்டு உன் மனத்தைக் கல்லாக்கிக்கொள்'' என்று கணவன் தன் மனைவிக்கு அறிவு புகட்டுவதுடன் 'அறிந்தோ அறியாமலோ அகலிகை என்னும் பெண் கணவனுக்குத் துரோகம் செய்து விட்டாள். எனக்கு அம்மாதிரி புத்தி வராது என்று கல்லை மிதித்துவிடு' என அம்மி மிதிப்பதின் பொருளைக் கூறுவர்.

சப்தரிஷி மண்டலத்தில் ஏழு ரிஷிகள் நக்ஷத்திரங்களாக விளங்குகின்றனர். வசிட்ட மகரிஷியின் அருகில் அதே நக்ஷத்திர உருவில் அவரது தேவியான அருந்ததியைக் காணும் தம்பதிகள் எந்நிலையிலும் நாம் பிரியோம் எனச் சபதம் எடுத்துக் கொள்ளுவதாகக் கூறுவர். சீதாராமர்கள் திருமணத்தை நடத்திவைக்க வந்த புரோகிதராக அமர்ந்திருந்த வசிட்டரையும் அவரது தேவியான அருந்ததியையும் பகலிலேயே கண்டனர். அதே திருமண மேடையில் முறையே இலட்சுமணன் ஊர்மிளையையும், பரதன் மாண்டவி என்ற பெண்ணையும், சத்ருக்னன் சுருத கீர்த்தி என்ற பெண்ணையும் மணந்துகொண்டனர்.

திருமணம் முடிந்தவுடன் இராமாயண அரங்கத்திலிருந்து விசுவாமித்திரர் மறைந்து விடுகிறார். சூரிய வம்சத்தில் அரிச்சந்திரன் - சந்திரமதி ஆகிய தம்பதிகளைச் சோதிக்கும் பொருட்டுப் பிரித்துப் பாடுபடுத்திய பாவம் நீங்க அதே சூரிய குலத்தில் ஒரு கணவன் மனைவியராச சீதாராமர்களைச் சேர்த்து வைத்து தனது பாவங்களை நீக்கிக் கொண்டு, மேலும் தவஞ்செய்ய இமயமலை சென்றார் விசுவாமித்திரர்.

திருமணம் முடிந்து தசரதர் மக்களுடனும் மரு மக்களுடனும் அயோத்தி திரும்பிய போது பரசுராமர் எதிர்ப்பட்டார். பரசுராமரும் திருமாலின் அவதாரமே. சமதக்னி - ரேணுகா தேவி என்ற தம்பதிகளின் மகன். கற்புக்கரசியான ரேணுகாதேவி தினமும் நீர்நிலையில் நிராடி, கையில் மண் எடுத்து, ''நான் சீலவதியானால் இது மண்பாண்டமாகட்டும்'' என்று கூற, அது மண்பாண்ட மாக மாற அதில் நீர் நிரப்பித்தன் கணவர் செய்யும் வழிபாட்டுக்கு உதவுவாள். ஒரு தினம் நீராடும்போது நீர் நிலையில் ஒரு வித்யாதரனின் நிழல் தெரிய, அது யாரோ? என எண்ணி அம்மை உற்று நோக்கினாள். பிற ஆடவனை நோக்கியதன் காரணமாக அவள் எடுத்த மண் பாண்டமாக மாறவில்லை. தனக்குப் பூசை செய்ய நீர் வராததினால் சீறிய ஜமதக்கினி முனிவர், தன் மக்களை அழைத்து 'கடமை தவறிய உங்கள் அன்னையின் தலையை வெட் டுங்கள்' எனக் கட்டளையிட, பரசுராமனின் சகோதரர் கள் மறுத்தனர். பரசுராமர் மட்டும் தந்தை சொற் கடவாது ஒரு வாளை எடுத்து அன்னையின் கழுத்தில் வீச, துண்டிக் கப்பட்ட தலை வெகுவேகமாகச் சென்று எங்கோ விழுந்து விட்டது. தன் சொற்படி கேட்ட மகனை மெச்சிய தந்தை ''உனக்கு என்ன வேண்டும்?'' எனக் கேட்க, பரசுராமர் ''என் அன்னையை எனக்குத் திரும்பவும் தர வேணும்'' என வரங்கேட்டனர். அந்த அம்மையின் தலையை எங்குதேடியும் காணக்கிடைக்காமையால், வேறு ஏதோ பெண்ணின் தலையை ஒட்ட வைத்து உயிரளித்தார் தவமுனிவரான ஜமதக்னி. அப்பெண் முகம் மாறி என அழைக்கப்பட்டாள். அதுவே நம் நாட்டில் மகமாயி என்ற கிராமதேவதையாக மருவி விட்டது. நம் பாவங்களான பீடைகளை நீக்கும் பெண்தெய்வத்தை பீடாபகாரி என அழைத்தனர். நாளடைவில் அதையே பிடாரி எனச் சுருக்கி விட்டனர்! என்னே விந்தை!

தாயின் மீது அன்புகொண்ட பரசுராமர், தன் தந்தையான ஜமதக்னி மகரிஷியை கார்த்தவீரிய அரசன் கொன்றுவிட, நாட்டிலுள்ள க்ஷத்திரியர்களையெல்லாம் கொன்று குவித்தார். ஒருவன் குற்றம் செய்தால் அது அவ்வவர் சாதியையே அழிக்க நேர்ந்து விடுகிறது. எனவே எவரும் குற்றம் செய்யாதிருக்க இறைவன் அருள்க!

இத்தகைய நற்குணவானான பரசுராமர் இன்று மிதிலை நோக்கிச் செல்லும் இராமபிரான் எதிரில் தோன்றினார்.

தேவர்கள் விசுவகருமன் என்ற தேவசிற்பியைக் கொண்டு பலமும் அழகும் வாய்ந்த இருவிற்களைச் செய்தனர். இதில் எந்த வில் சிறப்புடையது என்பதை அறிய விரும்பி சிவபெருமானிடம் ஒரு வில்லையும் திருமாலிடம் ஒரு வில்லையும் கொடுத்து இருவரும் சண்டையிடும்படி தூண்டினர். அப்போது சிவபெருமா னின் கரத்திலிருந்த வில் விரிந்து விட்டது. அது ஜனகர் வம்சத்தவரிடம் அளிக்கப்பட்டது. விஷ்ணு தன் வில்லை இருசிகமகரிஷிக்குக் கொடுக்க, அதை அவர் ஜமதக்னியிடம் அளிக்க அது பரசுராமரை அடைந்தது. விரிந்து இற்றுப்போன் வில்லை ஒடித்து இராமபிரான் சீதா பிராட்டியைத் திருமணம் செய்து கொண்டதை யறிந்து சீற்றங்கொண்ட பரசுராமர் தன்னிடமிருந்த வில்லைக் கொண்டு ''இதை வளைத்து விடுக'' என இராமபிரானிடம் வந்து விட்டார்.

பரசுராமர் கொடுத்த வில்லைக் கையில் வாங்கிக் கொண்ட இராமபிரான் ''பிரமகுலத்தில் உதித்த தாங்கள் அரசர்களைக் கொல்வதாகச் சபதம் பூண்டு அனேக அரசர்களைக் கொன்றீர்; வேதமறிந்த உங்களை அடியேன் கொல்லலாகாது. ஆனால் நீர் கொடுத்த வில்லில் ஒரு அம்பைத் தொடுத்துள்ளேன். அது வீணாகாது. அதற்கு இலக்கு என்ன?'' எனக் கூற, பரசுராமர் ''இராமபிரானே நீ உலகநாயகன் என அறிந்து கொண்டேன். உன் அம்பு வீணாக வேண்டாம். என் தவத்தை அதற்கு அளித்தேன்.'' என்றான். இராமபிரானின் அம்பு பாய்ந்து சென்று அவரது தவத்தை வாரி விழுங்கித் திரும்பியது.

எய்த அம்பு இடை பழுது எய்திடாமல் என்
செய்தவம் யாவையும் சிதைக்க எனாக்
கையவண் நெகிழ்தலும் கணையும் சென்று அவன்
மையறு தவமெலாம் வாரி மீண்டதே.

இராமபிரான் பரசுராமன் வேதமறிந்தவன் என்பதற் காக அவரைக் கொல்லாமல் விட்டாரே தவிர, உயர்ந்த ஜாதி என எண்ணியல்ல. எங்க [illegible] ...ரானாலும் தவ றிழைக்க[illegible] தணடிக்கப்படுவர் என்பது இராமாயணம் நமக்குக் காட்டும் நீதி. பரசுராமன் தன் தவவலிமையை இழந்த போதிலும் காயத்ரிஜபம் செய்த புண்ணியத்தை இழக்கவில்லை. காயத்ரிஜபம் மிக உயர்ந்தது. அதை ஜபம் செய்பவர் பிறருக்கு ஆசி கூறினால் பலிக்கும் என்பதே வேதம் பிராமணருக்கு அளித்த உரிமை. எனவே பலமிழந்த பரசுராமர் காயத்ரி ஜபம் செய்த வாக்கினால் எண்ணிய பொருளெலாம் இனிது முற்றுக (இதுவே சர்வாபீஷ்ட சித்தி ரஸ்து என்பது, வடமொழி மந்திரம்) என ஆசி கூறி பரசுராமர் மறைந்தார். பரசுராமப்படலம் என இக்கதையை கூறுவர். சிலர் பரசுராம கர்வபங்கம் என்பர். இராமன் என்ற பெயருக்கு கர்வம் ஏற்படாது என்பதை உணர வேண்டும். தகாத வர்களை அழிப்பதை தாடகை வதம் மூலமாகவும் நல்லோரைக் காப்பவன் என்பதை அகலிகைக்கு அருளி யதன் மூலமும் காட்டிய இராமபிரான் பலா அதிபலா மந்திரங்களை அடைந்ததும் பரசுராமனின் தவத்தையும் அடைந்து உலகைக் காக்கும் ஒரே ராமனாகி தந்தை முதலானவரை அழைத்துக் கொண்டு அயோத்தியை அடைந்தார்.

**ஜெய சீதாராமன் துணை**

(தொடரும்)

★★★

# கம்பன் முன்னுக்குப் பின் முரண்பட்டவன் அல்லன்

– என். ஸ்ரீனிவாசன், தாராசுரம்.
(குடந்தை தெய்வீக முத்தமிழ்ப் பேரவை)

(திருக்கோயில் ஆகஸ்ட் 99 மலரில் ஒரு சிக்கலும் தீர்வும் என்ற தலைப்பில் முனைவர் இரா. செல்வகணபதி அவர்கள் எழுதியிருந்த வினாவிற்கு இரு பெரும் தமிழறிஞர்கள் தந்துள்ள விளக்கங்கள் இங்கு அன்புடன் வெளியிடப்பட்டுள்ளன. படித்து மகிழவேண்டுகிறோம்.)

''வஞ்சனை பண்டு மடந்தை
வேடம் என்றே
நஞ்சம் என மாதரை உள்ள
லார்கள் தக்கோர்''

''வஞ்சனையின் மறு வடிவமே பெண்கள்'' என்பது கம்பனின் உள்ளார்ந்த கருத்தானால் சீதை முதலிய கற்பரசியரை அவன் போற்றி புகழ்வது முரண்பாடாக அமைந்துவிடுமே'' என்ற ஐயப்பாடு கட்டுரையாள ருக்குத் தோன்றியுள்ளது.

உலகில் அது ஆண் என்றாலும் அல்லது பெண் என்றாலும் சரி ஒவ்வொருவருக்கும் பல குணங்கள் உண்டு. எல்லோரும் ஒரே குணத்தவர் என்பது சரிப்பட்டு வராது. திருவள்ளுவர் பேசுவார்

"குணம் நாடி, குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்''

இந்தக் காலகட்டத்தில் நாம் முதலில் சிந்திக்க வேண்டியது கம்பன் ''வஞ்சனையின் மறு வடிவமே பெண்கள்'' என்ற கருத்தினைத் தெரிவித்த போது அவன் முன் நிலவிய சூழ்நிலை என்ன?

கைகேயி சூழ்வினைப் படலத்தில் தன் கணவ னும் அயோத்தி மன்னனுமான தசரதனிடம் இரண்டு வரங்களை கேட்கின்றாள்.

''ஏய வரங்கள் இரண்டில் ஒன்றினால் என்
சேய் அரசு ஆள்வது; சீதை கேள்வன் ஒன்றால்
போய் வனம் ஆள்வது என புகன்று நின்றாள்
தீயவை யாவினும் சிறந்த தீயாள்''

இதனைக் கேட்ட மாத்திரத்தில் தயரதன் உற்ற துன்பத்தினை 5 பாடல்களில் கம்பன் தருகின்றான்.

கைகேயியின் வாயிலிருந்து இந்த வார்த்தைகளை கேட்ட உடன் தயரதன் பாம்பால் கடிக்கப்பட்ட பெரிய யானை விழுவதை போல் கீழே விழுந்தான் என்றும் அவளைக் கொல்ல நினைப்பான், பெண் கொலை தகாது என்று அஞ்சுவான், மற்றும் உலகு பழிக்கும் அஞ்சுவான்; இப்படிப்பட்ட மனநிலையில் தயரதன் தள்ளப்பட் டான். அவன் உயிர் ஊசலாடும் நிலை. இராமன் பிரிந்தால் அவன் உயிர் போய்விடும் என்ற சாபம் உள்ளது, மற்றும் வாய்மையிடத்து மிக்க பற்று உடையவன் தயரதன்.

மனைவி என்பவளுக்கு சகதர்மணி என்றும் பதிவிரதை என்றும் பெயர்கள் உண்டு.

சகதர்மணி - என்றால் கணவனுக்கு ஒரு பெண் மனைவி யாக மட்டும் இல்லாமல், நண்பனாகவும் வழி நடத்தி செல்லுபவளாகவும் இருக்க வேண்டும்.

பதிவிரதை - என்றால் கணவனைத் தெய்வமாக கருதுவது.

இந்த இரண்டும் மனைவிக்கு அடிப்படை குணங்கள்.

தயரதனின் உயிர் ஊசலாடும் நிலையில் கைகேயி சகதர்மணியாகவும் இல்லை, பதிவிரதையாகவும் இல்லா மல் தான் கேட்ட வரத்தினை அடைந்தே தீர வேண்டும் என்ற எண்ணத்தில் மிகவும் கடுமையாக இருந்து இரக்கம் என்பதே அற்று காட்சி கொடுக்கிறாள்.

ஒரு கவிஞன் ஒரு காப்பியத்தினைப் படைக்கும் போது அவனின் குறிக்கோள் காப்பியத்தினை படிப் போரின் மற்றும் கேட்போரின் உள்ளம் அதில் லயித்து விடச் செய்ய வேண்டும் என்பதாகவே இருக்கும்.

தயரதன் உயிர் ஊசலாடும் சூழ்நிலையில் கதை யினை மக்கள் படிக்கும் போதும் அல்லது கேட்கும் போதும் இதற்கு முன் கதை நிகழ்ச்சிகளில் கைகேயி மிக

உத்தமியாக - சிறந்தவளாகக் காட்சி கொடுத்திருந்தாலும், இந்த சூழ்நிலையில் கைகேயியினைப் பார்ப்பவர்கள் அவளைத் தீயவள் - கொடுமைக்காரி என்பதனை தங்களை யும் அறியாமல் தம் வாயின்மூலம் முணுமுணுக்கக் கூடும். என்ன என்று? ''ஐயோ தயரதன் பாவம், இந்த கைகேயி பெண்ணா? இல்லை இவள் கொடுமைக்காரி''.

இதனை நன்கு உணர்ந்த கம்பன் தனது காப் பியத்தில் கைகேயியின் கொடிய உள்ளத்தினை நம்முன் வைக்கிறான்.

''கம்ப நெடுங் களியானை அன்ன மன்னன்
வெம்பி விழுந்து எழும் விம்மல் கண்டு வெய்துற்று
உம்பர் நடுங்கினர், ஊழி பேர்வது ஒத்தது
அம்பு அன்ன கண்ணவள் உள்ளம் அன்னதேயால்''.

இந்தச் சூழ்நிலையில் கம்பன் கைகேயியை பெண் என்றே நினைக்கவில்லை, எப்படி விஸ்வாமித்திரன் ராமன் தாடகையைப் பெண் என்று கருதி அம்புவிட யோசித்த போது ''பெண் அல்ல பேய் அவள்'' என்று கூறியது போல, கம்பனின் உள்ளத்தில் அரசி என்றோ தயரதனின் சிறந்த மனைவி என்றோ கருத இடம் ஏற்படவில்லை. தன் கணவன் இப்படி உயிர் போகும் நிலையிலும் தனது வரங்கள் கேட்ட எண்ணத்திலிருந்து சற்றும் விலகாத கைகேயி

''அஞ்சலள் ஐயனது அல்லல் கண்டும் உள்ளம்
நஞ்சினள் நாணிலள் என்ன நாணம் ஆமால்
வஞ்சனை பண்டு மடந்தை வேடம் என்றே
நஞ்சு என மாதரை உள்ளார்கள் தக்கோர்.''

என்று காட்டுகின்றார்.

கம்பனுக்குக் கைகேயி தூயவள் என்ற கருத்தி லும் அவளின் பெண்மைக்கு ஏற்றம் தரவேண்டும் என்ற கருத்திலும் வேறுபாடு இல்லை. ஏன் என்றால் தயரத னுக்குப் போர்க்களத்தில் தேர் ஓட்டியாக இருந்து அவனின் முழு வெற்றிக்கு அவளே முழு காரணமாக இருந்தவள், மற்றும் இராமனை வளர்த்தவளும் அவளே.

ஆனால் இந்த இரண்டு வரங்களை கேட்ட கால கட்டத்தில் அவள் வஞ்சனை மறு உருவாக கொண்டதால் கம்பன் அவளை வஞ்சனை பண்டுமடர்தை என்ற கருத்தை வெளிப்படுத்தியுள்ளான்.

சந்தர்ப்ப சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு பார்த்தோமேயானால் கணவனின் உயிர் போகும் நிலை யிலும் தனது மாங்கல்ய பாக்கியம் போய்விடும் என்ற நிலையிலும் கைகேயியிடம் கருணை இல்லாமல் வஞ்சனை மட்டுமே தலை ஓங்கி செயல்பட்டதால் கைகேயியை 'வஞ்சனைபண்டு மடந்தை வேடம்' என்ற சொற்களால் விமர்சித்தது சரியானதே. இதில் முரண்பாட் டுக்கு இடமே இல்லை. எனவே கவிச்சக்கரவர்த்திக்குக் காப்பியத்தில் முன்னுக்குப்பின் முரண்பட்டு இருக்கிறான் என்ற குற்றம் கண்டிப்பாக வந்து சேராது.

★★★

# இராமனின் தெய்வம் கைகேயி

(ஒரு சிக்கலும் தீர்வும் - அதற்கான விளக்கம்)

- கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

கைகேயியை அறிமுகப்படுத்தும் கம்பன் ''உறங் கும் போதுகூட கடைக்கண்களில் அருள் பொழிய (கடைக்கண் அளி பொழிய) உறங்கினாள் என்கிறார். விஷத்திற்கு மாற்றுமருந்து கொடுத்தாலும் அந்த விடம் மீண்டும் வருத்துவது போன்ற (நஞ்சு தீர்கிலாது அது நலிந் தென்ன) வார்த்தைகளைக் கொண்டு தீய மந்தரை தூயவளான கைகேயியின் மனத்தை மாற்றி விட்டாள். அதனால் கருணையே உருவானவள் கொடுமையே உரு வாக மாறிவிட்டாள். இராமபிரான் பிறந்த காரணம் பாவம் தன்னை அழித்துக் கொள்ளச் செய்த பாவத்தாலும், புண்ணியம் தான் என்றும் நிலை பெற்று நிற்பதற்காகச் செய்த புண் ணியத்தாலும் (விரிந்திடு தீவினை செய்த வெவ்விய தீவினையாலும் அருங்கடையின் மறை யறைந்த அறம் செய்த அறத்தாலும்) என்றார் விசுவா மித்ரர். கம்பனும் கவிக்கூற்றாக அரக்கர் பாவமும் அல்ல வர் இயற்றிய தவம் காரணமாகவும் கைகேயியின் மனம் மாறியது என்று கூறியுள்ளார். ஆனால் கைகேயி தூய்மை யான மொழிகள் பேசக்கூடியவள் தன் இரக்கத்தை விட்டு விட்டாள். துரக்க நல்லருள் துரந்தனள் தூமொழி மடமான் என்றார். கம்பன் கைகேயி தசரதனிடம் வரங் களை வேண்டியவுடன் தயரதனுக்கு ஏற்படக் கூடிய துன்பத்தை எண்ணி, கைகேயியை தீயவையாவையினும் சிறந்த தீயாள் - நாகம் எனும் கொடியாள் - என்று பாடி யுள்ளார். பெண்கள் வஞ்சனையே உருவானவர் என எண்ணியே பெரியோர்கள் பெண்களை நினையாதிருந்த னர். வஞ்சனை பண்டு மடந்தை வேடம் என்றே நஞ்சென மாதரை உள்ளலர்கள் தக்கோர் என்றும் தன்னேரில்லாத் தீயவள் என்றும் கொடியாள் என்றும்,

எரிந்து தணியாமல் பரந்து எரியும் தீபோல் உயிரை அழிக்கும் நெருப்புப் போன்றவள் பாயும் கனலே போல் எரிந்தாளுதே இன்னுயிர் உண்ணும் எரியன்னாள் என்றெல்லாம் கவிக் கூற்றாக கைகேயியை வெறுத்துப் பேசியுள்ளார். இராம பிரானை நாடாள வேண்டிய நல்ல தினத்தில் காடு செல்லு மாறு கூற வந்தவளை ''இரும்பு மனத்தவள் உயிர்களைக் கொல்லும் யமன் என்றது மட்டு மல்ல கொடுமையானவள் இரும்பினால் இயைந்த நெஞ்சில், கொன்றுழல் கூற்றமென்னும் பெயரினில் கொடுமை பூண்டாள் என் றெல்லாம் வெகு கடுமை யாகப் பேசியுள்ளார்.

கைகேயியின் மீது வெறுப்பேற்பட்டு அவளை இகழாதவர்களே இல்லை என்னலாம். இராமபிரான் மட்டும் கைகேயியைப்பற்றி ஒரு சொல் கூடக் கடுமை யாகப் பேசவில்லை. தசரதர் தன் துயரமும் கோபமும் நிறைந்த நிலையிலே ''கைகேயி என் மனைவியல்ல. அவள் பெற்ற மகனான பரதன் என் மகனல்ல'' என்று கூறிப் போந்தார். இராவணனின் அழிவிற்குப் பின் போர்க்களத்திலே தசரதர் இராமபிரான் எதிரிலே தோன்றி ''உனக்கு என்ன வரம் வேண்டும்?'' எனக் கேட்ட காலத்திலே, இராமபிரான் ''தந்தையே! நீங்கள் தீயவள் என வெறுத்த அம்மை எனக்குத் தெய்வம் போன்றவள் அவளுடைய மகன் நல்லவன். உமக்கு அவர்கள் வேண் டாம் என நினை... ...கலாம். தீயளென்று நீ துறந்த என் தெய்வமும் நன்மகனும் தாயும் தம்பியும் ஆம் வரம் தருக என்றார்.

★★★

தூமொழி மடமானாகிய கைகேயி ஏன் இத் தகைய பழியை ஏற்க வேண்டும்? இராமபிரான் தனது அன்னையிடம் வளரவில்லை. அவனை வளர்த்தது கைகேயிதான். தாய் கையில் வளர்ந்திலன்: வளர்த்தது தவத்தால் கேகயன் மடந்தை என்று மக்கள் கூடப்பேசிக் கொண்டதாகக் கவிஞர் கூறினார். பெற்ற பாசத்தைக் காட்டிலும் வளர்த்த பாசம் அதிகம் அன்றோ? பின் ஏன் கைகேயி கொடுமையின் உருவமாக மாறினாள்?

இரு கண்களுமில்லாத தாய் தந்தையரை உறிக் கட்டித் தூக்கிவந்த ஒரு முனிகுமாரன், அவர்களுக்குத் தண்ணீர் கொண்டுவருவதற்காக வந்த போது தசரத மகாராஜா தன்னையறியாது, யானை தண்ணீர் குடிக்கிறது என்று எண்ணி அம்புவிட்டு அந்த முனிகுமாரனைக் கொன்று விட, முனிகுமாரனுடைய தாய் தந்தையர்கள் ''நீயும், எம் போல் மகனைப் பிரிந்த துயரம் ஏற்பட்டு இறப்பாய்!'' எனச் சாபமிட்டு மறைந்தனர். மக்களே இல் லாது மனம் வருந்தியிருந்த தசரதன், மக்களை இழக்க வேண்டுமென்றால், நமக்கு மக்கள் பிறக்கப் போகிறார் கள் என மகிழ்ச்சி கொண்டார்.

மக்கள் பிறந்தனர். இராமபிரானை உயிரினும் மேலாக எண்ணி கைகேயி அன்பு செலுத்தினாள். வளர்ந்த இராமபிரான் விசுவாமித்திரர் பின் சென்று, சீதா பிராட்டியைத் திருமணம் செய்து கொண்டு அயோத்தி வந்ததும், கைகேயி திடுக்கிட்டாள். புத்திர சோகம் என்றால் மகனை இழப்பதல்லவா? இராமனை இழந்தால் தசரதருக்குப் புத்திர சோகம். அதுமட்டுமா ... சீதாபிராட்டி யான மருமகள... ...க்கு வாழ்வு பாழாகி விடும். ...வற்றுக்கும் மேலாக என் கண்மணி இராமபிரானை இழந்து நான் வாழமுடியாதே என எண்ணிப்பார்த்தாள்.

கைகேயி அரசின்மீது ஆசையுள்ளவளாயிருந் தால் ''அரசை மட்டும் கேட்டிருக்கலாம். இராமபிரா னிடமே அரசை பரதனுக்குக் கொடு என்றால் அரசு கிடைத்திருக்கும். தசரதர் ''அரசை நீ ஏற்றுக் கொள். இன்னொரு வரம் வேண்டாமென்று கூறு''. மண்ணே கொள் நீமற்றையதொன்று மற என்றான். இராமன் காடுசெல்ல வேண்டுமெனப் பிடிவாதமாயிருந்தாள். தசரதர் வரம் கொடுத்து மூர்ச்சையாகி விட்டார். இதனைக் கண்டு மகிழ்ச்சி கொண்ட கைகேயி நிம்மதியாக உறங்கி னாள். ஊறா நின்ற சிந்தையினாளும் துயில்வுற்றாள் என்பது கவிஞர் வாக்கு. எப்படி நிம்மதி வந்தது?

இராமபிரானுக்கு அழிவு வரக்கூடாது. ஆனால் தசரதர் மகனின் பிரிவால் அழிய வேண்டும். கலியுகத்தில் ஒரு சொத்தை 12 வருடங்கள் அனுபவிப்பவருக்கு அந்தச் சொத்து அனுபோகபாத்யதை என்ற பெயரால் சொந்த மாகி விடும். துவாபரயுகத்தில் கிருஷ்ணாவதார காலத் தில் 13 வருடம் அந்தச் சட்டம். அதனால் துரியோதனன் பஞ்சபாண்டவர்களைக் காடு செல்லும்படி செய்தான். திரேதாயுகத்தில் அனுபோகபாத்யதை 14 வருடம். கைகேயி இராமபிரானை தசரதரிடமிருந்து வலுக்கட் டாயமாகப் பிரிப்பதற்காக 14 வருடங்கள் இராமன் செல்லுமாறு வரங்கேட்டாள். அது கிடைத்த வுடன் இராமபிரானுக்கு ஆபத்து இல்லை. என்ற நிம்மதியில் தூங்கிவிட்டாள்.

தன் மனத்தே நினைத்துக் கொடுமை செய்து இராமபிரானுக்குத் தீங்கு வராது காத்தாள். அந்தக் கொடுமையால், கணவனை இழந்து தன் வாழ்க்கை யையே தியாகம் செய்தாள். இராமபிரான் மீது வெறுப் புடையவளாயிருந்தால், பரதனுடன் இராமபிரானை அழைக்க வந்திருக்கமாட்டாள். தனது வாழ்க்கையையே தியாகம் செய்து உலகம் பழி தூற்றிய போதிலும் இராம பிரானுக்குத் தீங்கு நேரவில்லை என மகிழ்ச்சியில் இடரிலா முகத்துடன் பரதனுடன் இராமபிரானைத் திரும்ப அழைக்க வந்தாள். (குகப்படலம்)

தன் வாழ்க்கையை தியாகம் செய்து, இராம பிரானுக்குத் தீங்கு நேராவண்ணம் காப்பாற்றிய கைகேயியை என் தெய்வம் என இராமபிரான் குறிப் பிட்டது மிகமிகத் தகுதியான சொல்.

இராமபிரானால் தெய்வம் எனக் குறிப்பிடப் பட்ட கருணையுருவம் கைகேயியின் தியாகத்தையும் சீலத்தையும் போற்றுவோமாக! ஜெய சீதாராமன் துணை.

# "தமிழ் மாலை"

– "கலைமாமணி" அ. அருளரசு மாசிலாமணி

பன்னிரு திருமுறைகளில் ஏழு திருமுறைகள் தேவாரங்கள். தேவாரம் என்ற பெயர் பிற்காலத்தில் ஏற்பட்டது. இதற்கு ஆதாரமாக 10ஆம் நூற்றாண்டில் தோன்றிய உமாபதி சிவாச்சாரியார் அருளிய கோயில் புராணத்தில் தேவாரம் என்ற சொல் காணப்படுகிறது. இது தோன்றிய காலம் முதல் பல நூறு ஆண்டுகள் தேவாரம் என்ற சொல் வழங்கவில்லை. இப்பாடல்கள் அனைத்தும் முதலில் "தமிழ்மாலை" என்றே அழைக்கப் பட்டன.

திருநாவுக்கரசர் அருளிய தேவாரத்தில் "பன்னிய நற்றமிழ் மாலை பாடுவித்தென் சிந்தை மயக்கறுத்த திருவருளினானை" என்று தமது பாடல்களை "தமிழ் மாலை" என்றே குறிப்பிட்டுள்ளார். "நல்லிசை ஞான சம்பந்தனும், நாவுக்கரசரும் பாடிய 'நற்றமிழ் மாலை' சொல்லியவே சொல்லி ஏத்துகப்பானை" என சுந்தர மூர்த்தி சுவாமிகள் பாடியுள்ளார். பெரிய புராணம், தேவாரம் ஆகியவைகளில் "தமிழ் மாலை" என்றே குறிப்பிடப் பட்டுள்ளது. "தமிழ்மாலை" என்ற சொல் தமிழுக்கும் சமயத்துக்கும் • திருமுறைப் பாடல்களுக்கும் உரிய பிணைப்பினை எடுத்துக் கூறுகிறது.

"மூவர் தமிழ்" என்றே திருமுறை வகுத்த ஆசிரியரும் தமிழ் மூதாட்டி ஔவையும் பாடிப்பரவியுள்ளனர். "தமிழ் மாலை" என்று குறிப்பிடும் தேவாரப்பாடல்கள் சமயத்துக்கும் - தமிழ்மொழிக்கும் - இறைவனுக்கும் தமிழ் இனத்திற்கும் சிறப்பினை சேர்த்துள்ளது. சேக்கிழார்

"திசை அனைத்தின் பெருமை எலாம்
தென்திசையே வென்றேற
மிசையுலகும் பிறவுலகும்
மேதினியே தனிவெல்ல
அசைவில் செழுந்தமிழ் வழக்கே
அயல் வழக்கின் துறைவெல்ல"

எனப் பெரிய புராணத்தில் பாடியுள்ளார். அந்தணர் குலத்தில் அவதரித்த திருஞான சம்பந்தர் தமிழ்மாலைப்பாடி தமிழையும் சமயத்தையும் செம்மைப்படுத்தினார்; எண் திசையில் தென்திசை ஏற்றம் பெற்றது. எல்லா மொழிகளிலும் தமிழ்மொழி தனித் தன்மையுடன் சிறந்தது; இவ்வாறு ஞானசம்பந்தரே பாடிய பின் இன்று நாம் தமிழ்வழிபாட்டை வரவேற்க வேண்டும்; ஞானசம்பந்தர் நெறியில் தமிழ் வழிபாடு செய்ய வேண்டும்; மேலும் முத்தாய்ப்பாக சேக்கிழார் "நமக்கும் அன்பினில் பெருகிய சிறப்பின் மிக்க அர்ச்சனை பாட்டே ஆகும். ஆகவே மண்மேல் நம்மை சொற்றமிழ் பாடுக என்றார் தூமறை பாடும் வாயார்" என சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாற்றில் சிவபெருமானே பாடுமாறு கூறியுள்ளார். இதனால் இறைவனை வழிபட "தமிழ் மாலைகள்" சிறந்தன என்பதை அறியலாம், "தமிழோடு இசை கேட்கும் இச்சையால் காசு நித்தல் நல்கினீர்" என சிவபெருமானின் தமிழ் மோகத்தினை சுந்தரத்தமிழால் சுந்தரர் பாடியுள்ளார்; தமிழகத்தில் அனைத்துத் திருக்கோயில்களிலும் நாள் தோறும் தமிழ் மாலைகள் பாடவேண்டும் என்ற உட்பொருளினைக் கொண்டு திருஞானசம்பந்தர் பதிகம் பாடினார்; இறைவனைத் "தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்" "எந்தை பூம்புகலூர் பாடுமின் புலவீர்கள்" என்று தமிழ் பாமாலைப்பாடல்களைப் பாடி இறைவனை வணங்க வேண்டும் என்று அருளாளர்கள் கூறியதை நாம் மறந்து திசைமாறி சென்று விட்டோம்.

நமது சமயவாழ்வு தற்காலத்தில் சமூகவாழ்வுடன் ஒவ்வாது தனித்துள்ளது. நமது முன்னோர்கள் அன்பே சிவம்; அடியார் பணியே அரன்பணி; தாழ்த்தப்பட்டோரை அரவணைப்பதே சமயப்பணி என்று உபதேசித்தார்கள்.

திருமுறை என்பது தெய்வீகத் தன்மையுடையது. பாடுவோரையும் கேட்போரையும் அவர் தம் நெஞ்சக் கல்லை நெகிழ்ந்திருக்கச்செய்யும் நெறியினை தரும் நூல்கள் தெய்வத்தமிழ் மாலை என்னும் பன்னிரு திருமுறைகளாகும்.

திருஞான சம்பந்தர் அருளியது முதல் மூன்று திருமுறை, திருநாவுக்கரசர் அருளியது 4, 5, 6ஆம் திருமுறை. சுந்தரர் அருளியது ஏழாம் திருமுறை. மணிவாசகர் அருளியது 8ஆம் திருமுறை. திருவிசைப்பா திருப்பல்லாண்டு 9ஆம் திருமுறை. திருமூலர் அருளிய திருமந்திரம் 10ஆம் திருமுறை. திருமுகப்பாசுரம், காரைக்காலம்மையார், நக்கீரர் போன்ற அருளாளர்கள் பன்னிருவர் அருளியது 11ஆம் திருமுறை. சேக்கிழார் அருளிய பெரிய புராணம் 12ஆம் திருமுறை. பன்னிரு திருமுறைகளிலும் 18 ஆயிரத்துக்கு மேற்பட்ட பாடல்கள் உள்ளன. பன்னிரு திருமுறைகளையும் இருபத்தேழு அருளாளர்கள் பாடியுள்ளனர். நம்பியாண்டார் நம்பி முதல் 11 திருமுறைகளை வகைப்படுத்தினார்; அநபாயச் சோழர் பதினொரு



திருமுறைகளுடன் சேக்கிழார் அருளிய பெரியபுராணத்தைச் சேர்த்து 12 திருமுறையாகச் செப்பேட்டில் பதித்து வைத்தார்.

சிவனருளால் சிவஞானம் பெற்று அருளாளர்கள் பாடியருளிய தனிச் சிறப்புடையன பன்னிரு திருமுறைகள் ஆகும். இதனை எழுதுமா மறை, எழுதுமறை என போற்றியுள்ளனர். வடமொழி வேதங்கள் மண்பாண்டங்கள், திருமுறைகள் பொற்கிண்ணங்கள் எனக் கூறுவர். வடமொழி வேதங்களை ஓதினால் உள்ளமும் ஊனும் இளகாது; திருமுறைகளைப் பொரு ளுணர்ந்து பாடினால் கருங்கல் இதயமும் கரையும்.

இத்திருமுறைப் பாடல்கள் மிகவும் தனிச் சிறப்புடைய வேதமந்திரங்கள். இதனைத் தொல்காப்பியர் ''நிறைமொழி மாந்தர் ஆணையிற்கிளந்த மறைமொழி தானே மந்திரம்'' என்பர். இந்த மந்திரங்களை முறையாக உணர்ந்து நெகிழ்ந்து பாடினால் முந்தை வினை முழுதும் விலகும். இதனை அருணகிரிநாதர் ''முந்து தமிழ்மாலை கோடி கோடி, சந்தமோடு நீடுப்பாடி பாடி'' என்று கூறியுள்ளார்.

திருமுறைகளின் சமுதாயக் கருத்துகளை ஆராயாது சிலர் சாதி சழக்குகளை நிலைநிறுத்திச் சமுதாயத்தில் வேற்றுமை பயிர்விளைவித்து விட்டனர். ஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் காலத்திலும் மூடக் கொள்கைகளைப் பேசும் பித்தர்கள் இருந்திருக்கிறார்கள். அதனை ஞானசம்பந்தர்

அவ்வினைக்கு இவ்வினையாமென்று
சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடாதிருப்பது உந்தமக்கு ஊனமன்றே
கைவினை செய்து எம்பிரான் கழல் போற்றுதும்
நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெறா திருநீலகண்டம்

எனப்பாடியுள்ளார். அருளாளர்கள் அனைவரும் சாதி வேற்றுமையைச் சாடியே தமிழ்ப் பாடல்களை பாடியுள்ளனர்.

அடுத்தவர் துன்பத்தால் துயர் அடையாமல், அவர்களுக்கு உதவி செய்யாது தம்பெயருக்கும் புகழுக்கும் சமயச் சடங்குகளுக்கும் பணத்தை வாரி வழங்குபவர்கள் உண்மையான பக்தியுணர்வுடையோர் அல்லர்; வாடிய பயிரை கண்டபோது வாடி உயிர் இரக்கம் கொண்டு பிறப்பால் உயர்வு தாழ்வு கருதாது எவ்வுயிரையும் தம்முயிராக கருதும் யாவரும் சமயசீலர்கள். அவர்கள் ''அன்பே சிவம்'' என்று உணர்ந்து வாழ்வதற்காக - சமுதாயம் ஒருமைப்பாட்டு உணர்வுடன் மனித நேயமிக்கதாக வாழ அருளாளர்கள் பாடியருளிய ''தமிழ் மாலை''யில் பல அரிய பாடல்கள் கோர்க்கப்பட்டுள்ளன. நாம் ''தமிழ் மாலை''யைப் போற்றிப் புகழ்ந்து ஓதி உணர்ந்து ஒன்று பட்டு வாழ்வோம்!

★★★

# வினாவும் விடையும் (சைவம்)

- டாக்டர் பருத்தியூர் K. சந்தானராமன்

1) சைவப் புராணங்கள் எத்தனை?
2) சைவத் திருமுறைகள் எத்தனை?
3) சைவ சமயக் குரவர்கள் யாவர்?
4) சந்தான குரவர்கள் யாவர்?
5) சைவச் சாத்திரங்கள் எத்தனை?
6) சைவத்தில் 'கோயில்' என்றால் எந்தத் தலத்தைக் குறிக்கும்?
7) ஈசனுக்கு எழுபது மாடக்கோயில்கள் எழுப்பிய மன்னன் யார்?
8) ''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'' - இதனைக் கூறியவர் யார்?
9) 'திருத்தாடகை ஈச்சரம்' என்ற திருக்கோயில் எந்த ஊரில் உள்ளது?
10) மூவர் தேவாரம் பெற்ற தலங்கள் எத்தனை?
11) தன்னைத் 'தமிழ் விரகர்' என்று கூறிக் கொண்டவர் யார்?
12) ''மனித்தப் பிறவியும் வேண்டுவதே'' எனப் பாடியவர் யார்?
13) இறைவனை நட்பு முறையில் அணுகிய நாயன்மார் யார்?
14) சிவபெருமானின் வில்லின் பெயர் என்ன?
15) தனிப்பதிகம் பெறாது, திருமுறையில் குறிப்பிடப் படும் தலங்களை எப்படி உரைப்பர்?
16) கைலை மலைச் சாரலில் சிவனடியார்களின் வரலாற்றை உரைத்த முனிவர் யார்?
17) அறுபத்து மூவரில் பெண் அடியார்கள் யாவர்?
18) கால பைரவர் சந்நிதி எங்குள்ளது?
19) நால்வர் நான்மணி மாலையின் ஆசிரியர் யார்?
20) தாருகாவனத்தில் ஈசன் எடுத்த கோலம் எது?
21) சிவலீலார்ணவம் என்ற நூலை இயற்றியவர் யார்?
22) வடமொழி வழியே சைவம் வளர்த்த இரண்டு மகான்கள் யார்?
23) நந்தி, கொடிமரம், தட்சிணாமூர்த்தி சந்நிதி ஆகியவை இல்லாத சிவத்தலம் எது?
24) திருவாசகம் தவிர மாணிக்க வாசகர் எழுதிய மற்றொரு நூல் எது?
25) பொன்னூசல் பாடல்கள் எந்தத் தலத்து இறைவன் மீது இயற்றப்பட்டவை?
26) திருப்பள்ளி யெழுச்சி எவ்வூர் இறைவனை எழுப்புகிறது?
27) மாணிக்கவாசகர் வரலாற்றை இயற்றியவர் யார்?
28) வைணவத்தில் குழலுக்குக் கோபாலன்; சைவத்தில் யார்?
29) ஈசனைக் கல்லால் அடித்த நாயனார் யார்?
30) சம்பந்தர் பதிகங்களை யாழில் இசைத்தவர் யார்?
31) சுவாமி புறப்படும் பொழுது தொடக்கத்தில் எந்த இசைப் பகுதியை நாதசுரத்தில் இசைப்பார்கள்?
32) சம்பந்தருக்கு ஈசன் தாளம் தந்த தலம் எது?
33) உமையின் சேடியர் இருவர் சுந்தரரின் துணைவியாராகத் தோன்றினர். கயிலையில் அவர்களின் பெயர் என்ன?
34) பஞ்ச புராணங்கள் எவை?
35) மும்மலங்கள் எவை?
36) ஈசனுக்கு உரிய மூன்று நந்திகள் யாவர்?
37) ஈசன் எந்த ஊரில் அப்பருக்குக் கயிலைக் காட்சியைக் காட்டினான்?
38) எந்த ஊர் தேவாரத்தில் 'திரு நணா' என்று குறிப்பிடப்பட்டுள்ளது?
39) ஈசன் பள்ளி கொண்டுள்ள திருத்தலம் எது?
40) காரைக்கால் அம்மையார் எங்கு முத்தி எய்தினார்?
41) சிவஞான சித்தியாரை இயற்றியவர் யார்?
42) தில்லையைப் போன்ற புதிய நடராசர் திருக்கோயில் எங்குக் கட்டப்பட்டுள்ளது?
43) பனி லிங்கத்தை எங்கு தரிசிக்கலாம்?
44) ஜோதிர்லிங்கத் தலங்கள் எத்தனை?
45) அப்பூதி அடிகளின் குருநாதர் யார்?
46) சரப மூர்த்தி சந்நிதி எங்குள்ளது?
47) நரிபரியாக்கிய திருவிளையாடல் மதுரையில் எப்போது கொண்டாடப்படுகிறது?
48) வள்ளலார் கோயில் என்ற திருக்கோயில் எங்குள்ளது?
49) மயிலையின் தல நாயனார் யார்?
50) அவர் திருநட்சத்திரம் எப்போது வருகிறது?
51) இறைவனும் இறைவியும் ரிஷபத்தின் மீது சாய்ந்த கோலத்தில் இருக்கும் மூர்த்தத்தின் பெயர் என்ன?

52) 'திருத்தொண்டத் தொகை'யைப் பாடியவர் யார்?
53) 'கயிலை பாதி காளத்தி பாதி அந்தாதி' யார் பாடிய நூல்?
54) சேரமான் பெருமாள் இயற்றிய உலா எது?
55) இறைவன் இயற்றியதாகக் கருதப்படும் சங்கத் தமிழ்ப் பாடல்கள் எத்தனை?
56) ''தட்சிணாமூர்த்தி திருவருட்பா''வை இயற்றியவர் யார்?
57) தொகை அடியார்கள் எத்தனை வகையுள் அடக்கம்?
58) ஓர் ஆண்டில் எத்தனை நடராஜர் அபிஷேகம் நடைபெறும்?
59) அப்பரும் சம்பந்தரும் படிக்காசு பெற்ற தலம் எது?
60) ''மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்'' என நம்பிக்கையூட்டியவர் யார்?
61) ஈசனுக்குரிய நான்கு சக்திகள் யாவர்?
62) பார்வதி பரமசிவன் திருமணம் நடந்த நாள் எது?
63) அதனைத் தொலைக் காட்சியாகக் கண்டவர் யார்?

## விடைகள்

1) பத்து.
2) பன்னிரெண்டு.
3) திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர்.
4) மெய்கண்டார், மறைஞான சம்பந்தர், அருணந்தி சிவாச்சாரியார், உமாபதி சிவம்.
5) பதினான்கு.
6) சிதம்பரம்.
7) கோச் செங்கட் சோழன்.
8) திருமூலர்.
9) திருப்பனந்தாள்.
10) நாற்பத்து நான்கு.
11) திருஞான சம்பந்தர்.
12) அப்பர்.
13) சுந்தரர்.
14) பினாகம்.
15) வைப்புத்தலம்.
16) உபமன்யு.
17) காரைக்கால் அம்மையார், மங்கையர்க்கரசியார், இசை ஞானியார்.
18) காசி மற்றும் விருத்தாசலம்.
19) சிவப்பிரகாச சுவாமிகள்.
20) பிட்சாடனர்.
21) நீலகண்ட தீட்சிதர்.
22) அப்பய்ய தீட்சிதர், ஹரதத்த சிவாச்சாரியார்.
23) ஆவுடையார் கோயில்
24) திருக்கோவையார்.
25) திருவுத்தர கோசமங்கை.
26) திருப்பெருந்துறை (ஆவுடையார் கோயில்)
27) கடவுள் மாமுனிவர்.
28) ஆனாய நாயனார்.
29) சாக்கிய நாயனார்.
30) திருநீலகண்ட யாழ்ப்பாணர்.
31) மல்லாரி.
32) திருக்கோலக்கா.
33) கமலினி, அநிந்திதை.
34) தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணம்.
35) ஆணவம், கன்மம், மாயை.
36) தருமநந்தி, விஷ்ணு நந்தி, அதிகார நந்தி.
37) திருவையாறு.
38) பவானி.
39) சுருட்டப்பள்ளி.
40) திருவாலங்காடு.
41) அருணந்தி சிவாச்சாரியார்.
42) சதாரா (மகாராட்டிரம்)
43) அமர்நாத்.
44) பன்னிரெண்டு.
45) திருநாவுக்கரசர்.
46) திருபுவனம்.
47) ஆவணி மூலம்.
48) மயிலாடுதுறை.
49) வாயிலார் நாயனார்.
50) மார்கழி ரேவதி.
51) ரிஷபாந்திக மூர்த்தி.
52) சுந்தரர்.
53) நக்கீரர்.
54) திருக்கயிலாய ஞான உலா.
55) இரண்டு.
56) தருமையாதீனம் 10 ஆவது குருமகாசன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்.
57) ஒன்பது.
58) ஆறு.
59) திருவீழி மிழலை.
60) திருஞான சம்பந்தர்.
61) துர்க்கை, கௌரி, காளி, திருமால்.
62) பங்குனி உத்திரம்.
63) அகத்தியர்.

★★★



ஈரோடு மாவட்டம், பவானி அருள்மிகு சங்கமேஸ்வர் ஆலயத் திருப்பணிகளை நம் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் திருமிகு சுகவனேஸ்வர், இ.ஆ.ப. அவர்கள் 25.8.99 அன்று நேரில் சென்று பார்வையிட்டார்கள். திருப்பணிச் செல்வர் பொள்ளாச்சி நா. மகாலிங்கம் அவர்களும், கோவை இணை ஆணையாளர் திருமிகு கே.கே. இராஜா அவர்களும் உடன் உள்ளார்கள்.






வடபழநி அருள்மிகு வடபழநியாண்டவர் ஆலயத்தில் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறையின் சார்பில் மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பவளவிழா நிறைவு மற்றும் 76ஆம் ஆண்டு பிறந்தநாளை முன்னிட்டு ஏழைக்குடும்பத்தைச் சார்ந்த 76 இணைகளுக்கு இலவசத் திருமணவிழா, 16.9.99 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. இத்திருமணவிழாவிற்கு மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப்பண்பாடு மற்றும் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமை தாங்கிச் சிறப்புரையாற்றி னார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்துறை அமைச்சர் ஆர்க்காடு நா. வீராசாமி அவர்கள் தம் திருக்கரத்தால் மங்கல நாண் எடுத்துக் கொடுத்துத் திருமணங்களை நடத்தி வைத்தார்கள். மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் எஸ்.பி. சற்குண பாண்டியன் அவர்கள், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் க. சுந்தரம் அவர்கள், இந்துசமய அறநிலைய ஆட்சித் துறையின் சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் திருமிகு சுகவனேஸ்வர், இ.ஆ.ப. அவர்கள் மற்றும் பல முக்கிய பிரமுகர்கள் இந்த இலவசத் திருமண விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை - 600 014.